பிப்ரவரி 2005
www.padippakam.com
ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



சங்கரமட விவகாரம்:
கருணாநிதி-ஜெயலலிதா
அரசியல் மாறாட்டம்

# அன்று கொன்றது சுனாமி!
# நின்று கொல்கிறது அரசு



படிப்பகம்

www.padippakam.com

### ''ஸ்டார்ட், காமிரா, ஆக்ஷன்!...''

# விவேக் ஓபராய் நடித்து வழங்கிய ''நிவாரண உதவி!''

''ஸ்டார்ட், கேமிரா, ஆக்ஷன்''. - உடைந்த படகுகள், உருக்குலைந்த வீடுகள், எரியும் பிணங்கள், கடற்கரையில் சகதி, கண்ணீரில் மீனவர்கள், தூரத்தில் கசங்கிய சட்டை, கிழிந்த ஜீன்ஸ்; 'டைட் குளோஸில்' கிழிந்த ஜீன்ஸைப் பிடித்துக் கொண்டு சிரிக்கும் அனாதைக் குழந்தை!.... கட்!

யார் அந்த ஹீரோ! விவேக் ஓபராய்! சுனாமி போலவே அவர் திடீரென வந்தார்! திடீரென மறைந்தார்!

•••

கடலூர்-தேவனாம்பட்டினம்; சுனாமி பேரழிவால் சூறை தேங்காய் போல், சில்லுகளாகிச் சிதறிய கிராமம். இப்போது, அங்கு விவேக் ஓபராய் என்ற பெயர் இரண்டாவது சுனாமி போல் கசப்புடன் நினைவு கூறப்படுகிறது!

''புராஜக்ட் ஹோப்!'' (நம்பிக்கை திட்டம்) - தேவனாம்பட்டினத்தைத் தத்தெடுத்ததாகக் கூறிய, விவேக் ஓபராய் தன்னுடைய நிவாரணத் திட்டத்திற்கு வைத்த பெயர் இது!

உடனே பத்திரிகைகள் ஒன்று சேர்ந்து, குலவி சத்தம் போட்டு விவேக் ஓபராய்க்கு ''டைட்டில் சாங்'' பாடின! ''நிஜமாய் ஒரு ஹீரோ'', ''ஹாட்ஸ் ஆஃப் விவேக் ஓபராய்'', ''ஓடிவந்த ஓபராய்!'' என்று கும்மியடித்தன.

''மீனவர்கள் புது வாழ்க்கையைத் தொடங்க என்னென்ன தேவையோ அத்தனையும் செய்வேன்.. எவ்வளவு செலவாகிறது என்பதைப் பற்றி நான் யோசிக்கவும் இல்லை. கவலைப்படவும் இல்லை'' என்றார் ஓபராய். (ஜூனியர் விகடன், 9.1.05)

''சேதமடைந்த வீடுகளைப் புதுப்பிக்கும் பணியும் தொடங்கி விட்டது. இதற்காக லாரி லாரியாக சிமெண்ட் மூட்டைகள் வந்து இறங்க ஆரம்பித்து விட்டன. அடிக்கடி செல்போனில் பேசிய விவேக் ஓபராய், 'செங்கல் வந்து விட்டதா? கம்பிகளை எங்கே வைக்கிறீர்கள்?' - செம பிஸியாகப் பேசிக் கொண்டே கிராமம் முழுவதும் சுற்றிக் கொண்டிருந்தார்.'' (குமுதம் ரிப்போர்ட்டர், 9.1.05)

''நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் மதிப்பில் நானூறு வீடுகளை உடனடியாகக் கட்டச் சொன்னார் ஓபராய். அவர் சொன்னது போலவே இரண்டே நாட்களில் முந்நூறு வீடுகள் கட்டி முடிந்துவிட்டது'' (குமுதம் ரிப்போர்ட்டர், 13.1.05)

ஆங்கிலப் பத்திரிகைகள் உலகம் முழுக்க இச்செய்திகளை வெளியிட்டு, 'மாபெரும் உதவி' என்ற பிரமிப்பை ஏற்படுத்தின. 'ராய்ட்டர்' எனும் பன்னாட்டு ஏகபோக செய்தி நிறுவனம், ''நிவாரணம் வழங்கும் விவேக் ஓபராய்'' என்று பிரம்மாண்டமான புகைப் படங்களை வெளியிட்டது.


விவேக் ஓபராய் கட்டிக் கொடுத்த சுடுகாட்டு கொட்டகையைப் பற்றி கேள்வி கேட்டாலே தேவனாம்பட்டினம் கிராமத்து மீனவப் பெண்கள் நம்மை பிரித்து ஆய்ந்து விடுகிறார்கள்.

''வண்டிப்பாளையம் அம்மனுக்கு வேப்பிலை சாத்தும் பெண்கள், தங்கள் உடம்பைச் சுற்றி வேப்பிலைக் கட்டி நேர்த்திக் கடன் செய்வார்கள். அதற்காக கோயில் நிர்வாகத்தில் ஓலை மறைப்பு ஒன்றைப் பெண்களுக்குக் கட்டித் தருவார்கள். அதன் மறைப்பில் துணியை அவிழ்த்துவிட்டு வேப்பிலைக்கு மாறுவார்கள். அதுதான் இது'' என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறினார்கள், மீனவப் பெண்கள்.

''மிலிட்டிரிக்காரன் கட்டிக் கொடுத்த கூடாரத்துல நாய் தான் நுழையும்! சினிமாக்காரன் கட்ன கொட்டாயில

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

ஸ்டார்ட், ஆக்ஷன்: தேவனாம்பட்டினத்தில் சினிமா படப்பிடிப்பு போல நடந்த விவேக் ஓபராயின் நிவாரண உதவி.




படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 20

இதழ் 4

பிப்ரவரி 2005

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


## சங்கரமட விவகாரம்:

# கருணாநிதி – ஜெயலலிதா அரசியல் மாறாட்டம்

ஆள் மாறாட்டம் செய்தால், அது தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம். ஆனால், அரசியல் மாறாட்டம் செய்தால், இது அரசியல் சாணக்கியம் என்று போற்றப்படுகிறது. அந்த அளவுக்கு, அரசியலைப் பரிணாம வளர்ச்சியடையச் செய்துவிட்டார்கள் ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்கள். அரசியலில் இதெல்லாம் வழக்கம்தான் (''சகஜம்பா'') என்று ஊரே கைகொட்டிச் சிரிக்குமாறு இழிந்து போய்விட்டார்கள்; இருந்தாலும், இதுவும் தமது வசதிக்குத்தான்; தாம் என்னதான் சந்தர்ப்பவாதம் பித்தலாட்டம் செய்தாலும் அதையும் சகித்துக் கொள்ளும் ''பக்குவ நிலைக்கு'' மக்கள் மாறிவிட்டார்கள் என்று ஓட்டுக் கட்சித் தலைவர்கள் மகிழ்ந்து போகிறார்கள்.

எனவேதான், அரசியலில் நிரந்தரப் பகைவனும் கிடையாது; நண்பனும் கிடையாது, கூட்டணி வேறு, தொகுதிப் பங்கீடு வேறு; கட்சியின் கொள்கை, இலட்சியம் போன்றவற்றுக்கும், அரசியல் கூட்டுகளுக்கும் சம்பந்தம் கிடையாது, அதுவேறு, இதுவேறு; அரசியலில் எதுவும் நடக்கலாம்; தேர்தல் கூட்டுகளுக்கு பொது அடிப்படை எதுவும் தேவையில்லை, எத்தனை தொகுதிகள், வெற்றிக் கூட்டணி போன்றவைதாம் முக்கியம் - இவ்வாறு சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்களையே பொது நியதியாக்கி விட்டார்கள், ஓட்டுக் கட்சித் தலைவர்கள்.

இந்த வகை சந்தர்ப்பவாதப் பித்தலாட்டத்தின் மிகமிக சமீபத்திய எடுத்துக்காட்டுதான் சங்கர மட விவகாரங்களில் கருணாநிதியும் ஜெயலலிதாவும் நடத்தும் அரசியல் மாறாட்டங்கள். ''இது நம்மவாள் ஆட்சி'' என்று பார்ப்பனர்களின் சாதி சங்கமே ஜெயலலிதா ஆட்சியைத் தலையில் வைத்துக் கொண்டாடியது; ''ஆம். நான் பாப்பாத்திதான், என்னை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது'' என்று சட்டமன்றத்திலேயே பகிரங்கமாக அறிவித்தார் ஜெயலலிதா. ''நாட்டுக்கே முன்னுதாரணமாக விளங்கும் இந்து முதல்வர்'' என்று ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் போற்றிப் புகழ்ந்தார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரனைத் தனது ராஜகுரு என்று அறிவிக்கவில்லையே தவிர, அதற்குரிய எல்லா மரியாதைகளையும் ஜெயா கொடுத்தார். கோவில்களில் வேதபாடசாலைகள், ஆறுகால பூசைகள், அன்னதானங்கள், குடமுழுக்குகள் தொடங்கி, கட்டாய மதமாற்றத் தடை, ஆடு - கோழி வெட்டத் தடை என்று ஜெயேந்திரனின் ஆசிகள் - ஆலோசனைகள் படியே எல்லாமும் நடந்தன. அரசு பதவிகளில் பார்ப்பனர்களுக்கு முன்னுரிமை வழங்குவதில் ஜெயேந்திரனின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டன. அத்வானி, அசோக் சிங்கால், தொகாடியா, மோடி, இராம.கோபாலன் போன்ற மதவெறியர்களின் பாசறையாகத் தமிழ்நாட்டை மாற்றினார், ஜெயலலிதா.

அப்படியெல்லாம் செய்த ஜெயலலிதா, தற்போது சங்கராச்சாரிகளுக்கும் சங்கர மடத்துக்கும் எதிராக அடுத்தடுத்து எடுத்துவரும் நடவடிக்கைகள் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் மற்றும் மடத்தின் விசுவாசிகளுக்கு அதிர்ச்சி அளிக்கத் தக்கனவாக உள்ளன. அவர்களுக்கு எதிரானவர்களுக்கு வியப்பளிக்கக் கூடியவையாக உள்ளன. ஜெயலலிதாவின் ஓட்டுக் கட்சி அரசியல் எதிரிகள் திணறிப் போனார்கள். குறிப்பாக, ஜெயேந்திரனின் பிணை கோரும் மனுவுக்கு எதிராக அடுக்கப்பட்ட துணிச்சலான - தெளிவான வாதங்கள், ஜெயலலிதா தலைமையிலான அரசுத் தரப்புடையதுதானாவென்று திகைப்படையச் செய்துவிட்டன. ஜெயேந்திரன் சட்டத்தின் முன் ஒரு கிரிமினல் குற்றவாளிதான்; நேபாளத்துக்குத் தப்பியோட முயன்றார்; தற்கொலை செய்து கொள்ளவும் விழையக் கூடியவர்; கிரிமினல் குற்றக் கும்பலுடன் நெருக்கமான உறவு வைத்திருந்தர்; துறவிக்குரிய பண்புகள் உள்ளவர் அல்ல; பெண்களுடன் தகாத உறவு வைத்திருந்த ஒழுக்கக் கேடர்; ஆன்மீகப் பணிகளில் இருந்து விலகிப் போனவர்; மடத்துக்குச் சொந்தமான நிதி - சொத்துக்களை கேடாகப் பயன்படுத்தியவர் - என்று ஜெயேந்திரனின், சங்கரமடத்தின் குற்றங்கள் பலவும் அம்பலப்படுத்தப்பட்டன.

எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது, சின்ன சங்கராச்சாரி விஜயேந்திரனின் கைது குறித்து மனித உரிமைக் கமிசன் அனுப்பிய தாக்கீதுக்குத் தடைகோரிய வழக்கில் ஜெயலலிதா அரசு முன் வைத்த வாதங்கள்தாம். சங்கரமடம் ஒரு புனிதமான இடம் அல்ல; அங்கு இந்துமதக் கோவில் எதுவுமில்லை; இறந்த சங்கராச்சாரி சந்திரசேகரனின் சமாதிதான் உள்ளது; அது சில குடும்பங்கள் வாழும் குடியிருப்புத்தான். காஞ்சி சங்கரமடம் 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது, ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட ஐந்தாவது மடம் என்பதெல்லாம் பொய்; விஜயேந்திரனைக் கைது செய்யப்

போலீசு போனபோது, அவர் சமாதிக் குப் பின்னால் ஒளிந்து கொண்டு பூசை செய்வது போல நடித்தார் என்பது உட்பட பல உண்மைகளைப் போட்டு உடைத்தது. இன்னும் ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகளால், சங்கரமடம் 6000 கோடி சொத்துக்களைக் குவித்து வைத்துள்ளது, நூற்றுக்கும் மேற்பட்ட அறக்கட்டளைகள் நடத்துவது, 180 வங்கிக் கணக்குகள் வைத்திருப்பது, ஆன்மீகப் பணி என்ற பெயரால் பல தொழில்களும், நிதி மோசடிகளும் நடப்பது என்ற பல உண்மைகள் வெளிவந்திருக்கின்றன.





கப்பலை மூழ்கவிடக் கூடாது, மாலுமியைத்தான் மாற்றவேண்டும் என்று அறிக்கை விட்டு - ஜெயேந்திரர்தான் சிக்கிக் கொண்டார், விஜயேந்திரர் உத்தமர் என்று காட்டி புதிய மடாதிபதியாக்கி விடும் முயற்சியில் ஈடுபட்ட சங்கரமட சதிகாரர்களுக்குத் துணை போனார், கருணாநிதி.



அரசியல் ரீதியில் ஜெயலலிதாவுக்கு எதிர்முனையில் இருக்கும் கருணாநிதி, இவ்வளவு காலமும் என்ன பேசி, எழுதி, என்ன தோற்றத்தைக் காட்டிவந்தாரோ அதையெல்லாம் குப்புறக் கவிழ்த்து விட்டு, திராவிட - பகுத்தறிவு வாதிகளுக்கெல்லாம் அதிர்ச்சியூட்டும் வகையில் — சங்கராச்சாரி கைது, சங்கரமடம் குறித்து — இப்போது நடந்து கொண்டிருக்கிறார். காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகளைக் (ஜெயேந்திரன் கும்பலை மனதில் வைத்துத் தான்) கைது செய்யக் கோரி உண்ணாவிரதம் போராட்டம் அறிவித்திருந்தது தி.மு.க. ஜெயேந்திரன் கைதான போது அதை ரத்து செய்ததோடு, நேர்மையான நடவடிக்கை என்று வரவேற்ற கருணாநிதி, சாமியார்களின் இது போன்ற நடவடிக்கையைத் தடுக்க தனியாக சட்டம் கொண்டு வரவேண்டும் என்றார். கடவுள், மதம், பக்தி என்ற பெயரால் நடக்கும் மோசடிகளைத் தடுத்து மக்களிடம் விழிப்புணர்வு வர வேண்டும். மந்திரம், தந்திரம், மாயா ஜாலம் என்று மக்களை ஏமாற்றுகிறவர்கள், பெண்களிடம் தவறாக நடப்பவர்களுக்கு எதிராக சட்டம் வரவேண்டும் என்றார்.

ஆனால், அடுத்த ஓரிரு நாட்களிலேயே ஒரு குட்டிக்கரணம் போட்ட கருணாநிதி, ''ஆதிசங்கரர் முதல் சந்திரசேகரேந்திரர் வரையில் தாம் ஏற்ற பொறுப்புக்கு எள் முனையளவும் இழிவு சேர்ப்பதாக என்றைக்கும் அமைந்திடவில்லை; அவர்களிடம் ஒரு கண்ணியமிக்க அன்பும் மதிப்பும் தமக்கு தொடர்ந்து இருந்து வந்தது. சந்திரசேகரேந்திரரிடம் சாந்த குணமும், சற்குணச் செயல்களும் இருந்தன; ஆயிரங்காலத்துப் பயிர் என்பது போல ஆதி சங்கரர் அவர்களின் அருளாசியால், இந்தப் பெரும் நிறுவனம் மகத்தான வளர்ச்சி காண்பதற்குத் தங்கு தடையில்லாத நிலை உறுதிப்பட்டிருந்ததை உணர முடிந்தது. சந்திரசேகரேந்திரர் காலம் வரையில்தான் அந்தக் கட்டுக் கோப்பு கடைப்பிடிக்கப்பட்டது. ஜெயேந்திரரின் செயல்பாடுகளால் தான் சங்கரமடத்துக்குக் களங்கங்களும், குழப்பங்களும் நேர்ந்து விட்டன. மாறாக, காஞ்சி சங்கரமடத்தில் இப்போது எழுந்துள்ள புயலால் அந்த நிறுவனம் அறவே அழிந்துவிடக் கூடாது. மாலுமி சரியில்லையென்றால் கப்பலைக் கவிழ்த்துவிட முடியாது - கப்பலை சரியாக செலுத்தக் கூடிய புதிய மாலுமியைத் தான் தேட வேண்டும், கப்பலையும் காலத்திற்கேற்ப சரி செய்து அமைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பெரிய நிறுவனம் அழிந்து போகாமல் காத்திட அரசும், அறநிலையத்துறையும் ஆவண செய்திட வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

சிறீரங்கம் ரங்கநாதனையும், தில்லை நடராசனையும் பீரங்கி வைத்துப் பிளக்கும் நன்னாளுக்காகக் காத்திருந்த கருணாநிதியும் அவரது தற்போதைய அரசியல் ஆலோசகர் ''இந்து'' ராமும் கலந்தாலோசித்து சங்கரமடக் கப்பல் மூழ்கி விடாமல் காப்பாற்றும் புனிதப் பணியில் மறைமுகமாகப் பங்கேற்றனர். ஜெயேந்திரன் கைதுக்குப் பிறகு ஐதராபாத்திலிருந்து திரும்பிய சின்ன சங்கராச்சாரி விஜயேந்திரனைத் தமிழ்நாட்டு எல்லையிலேயே ''இந்து'' பத்திரிகைக் குடும்பத்தினர் உட்பட டி.என். சேசன் போன்ற சங்கரமட பங்காளிகளும் விசுவாசிகளும் வரவேற்று அழைத்து வந்தனர். ஜெயேந்திரனால் தான் எல்லாம் கெட்டுப் போனது என்று கூறி விஜயேந்திரனை மடாதிபதியாக மகுடம் சூட்டி, சங்கர மடத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர். ஜெயேந்திரனைப் பலிகடாவாக்கி, சங்கரமடத்தை காப்பாற்றும் இந்த முயற்சி கருவிலேயே சிதைந்து போனது. விஜயேந்திரன், அவன் தம்பி ரகு மற்றும் சங்கரமட அதிகாரிகள் அடுத்தடுத்த கிரிமினல் குற்றவாளிகள் என்று அம்பலமாகி, குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைத்ததன் மூலம், அவர்களின் முகத்தில் கரிபூசப்பட்டது. காமகோடி பீடம் என்ற பெயருக்கேற்ப காமக் களியாட்டங்கள், நிதிமோசடிகள், கிரிமினல் குற்றங்கள், சமூக விரோத சதியாலோசனைகள் நடத்தும் கும்பல்களின் கூடா

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

www.padippakam.com

# ஆழ்கடலையே வென்றவர்கள் அதிகார கும்பலிடம் தோற்பதா?

மீனவர்கள் என்றாலே, 'குப்பத்து ஜனங்கள், குடிகாரர்கள், முரடர்கள், மூளையற்றவர்கள், நாகரீகம் தெரியாதவர்கள், நாற்றம் பிடித்தவர்கள்' என்று தமிழ் சினிமா பாணியில் அரசு எந்திரமும் அதிகார வர்க்கமும் மீனவர்களை மற்ற மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

சுனாமி பேரழிவுத் துயரங்களை கடைச்சரக்காக விற்றுக் காசாக்கும் சந்தை ஏடுகளும், தொலைக்காட்சி நிறுவனங்களும் இதற்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல! நிவாரணம் கோரும் மீனவர்களின் தன்மானத்தை, பிணம் தின்னும் கழுகுகள் போல் சுற்றி நின்று, ரணப்படுத்தி குதூகலித்தன. 'பிணத்தை எல்லாம் காட்டிப் பணமாக்கி விட்டார்கள்!'; 'கருணையாகக் கொடுத்த நிவாரணப் பொருட்களை எல்லாம் ஏமாற்றி வாங்கிக் காசாக்கி விட்டார்கள்' என்று அருவெறுப்பான பிரச்சாரத்தை மேற்கொண்டன.

ஆனால், சுனாமி பேரழிவால் மண்மேடாகிப் போனத் தங்கள் குடிசைகளின் இடிபாடுகளில் அமர்ந்திருக்கும் மீனவப் பெண்கள், ''புழுத்துப் போன ரேசன் அரிசியும், கிழிந்து போன கந்தை துணியும், சுடுகாட்டுக் கொட்டகையும் எங்களுக்கு எதற்கு? எங்களைத் தொழிலுக்கு அனுப்புங்கள், அது போதும்!'' என்கிறார்கள் கண்ணீரைத் துடைத்தபடி. ''கடல்தான் எங்களுக்குத் தாய்! எங்களது கஷ்டம் அவளுக்குத் தெரியும்! எங்களுக்குத் தேவையானதை அவள் கொடுப்பாள்!'' என்கிறார்கள், தாயின் அரவணைப்புக்கு ஏங்கும் குழந்தைகள் போல்.

மீனவர்கள் வேண்டுவது இதுதான்: ''மீண்டும் எங்களைக் கடலில் விட்டு விடுங்கள்!'' என்று கரையில் வீசப்பட்ட மீன்களைப் போலத் துடிக்கிறார்கள்.

நேற்று வரை கடலையே அரசாண்டவர்கள் மீனவர்கள்! இன்று, அவர்கள் அடுத்தவர்கள் கருணையில் வாழும் அவலத்தை அறுவெறுப்பாக உணர்கிறார்கள்!

''குப்பத்தில் வாழ்ந்தாலும் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல! எங்களுடைய வாழ்க்கை முறை உங்களை விட உயர்வானது! உழைப்பதிலும் சரி! உண்ணுவதிலும் சரி! நாங்கள் நேர்த்தியானவர்கள்!'' என்கின்றனர் கடலூர் தேவனாம்பட்டினம் மீனவப் பெண்கள்.

''கருவாடு மாதிரி காய்ந்து கிடக்கிறீர்களா?'' என்று நாம் பேட்டியின் போது கேட்டதற்கு சரவெடி மாதிரி அவர்கள் அளித்த பதில் இது.

''சுனாமிக்கு முன் இப்படி கேட்டிருந்தால், நீங்கள் உருப்படியாகப் போயிருக்க முடியாது!'' என்று ஒரே போடாய்ப் போட்டார்கள்! அவமதிப்பவர்களை அவர்கள் சகித்துக் கொள்வதில்லை. அதற்கெதிரான தீர்ப்பையும் தண்டனையையும் கூட அவர்கள் தள்ளிப் போடுவதில்லை.

இது ஏதோ மீனவர்களின் மீதான புகழ்ச்சி பாமாலை அல்ல! அவர்கள் வாழ்வில் காணும் அன்றாட உண்மை இது!

மீனவர்களுக்குக் கடல் என்பது தொழிலுக்கான கருவி அல்ல! தாயின் மடி!

மீனவக் குழந்தைகளை கடலில் நடைபயில வைக்கும் நடைவண்டி தான், கட்டுமரம்! தவழும் குழந்தைகள் தத்தி நடக்கத் துவங்கியவுடன், கடலலையில் விளையாட, தந்தைக்கு முன் ஓடுவது கண்கொள்ளாக் காட்சி!

''எங்களைப் பார்த்தவுடன் கடல் தாய் எங்களுடன் கண்ணா மூச்சி ஆட ஓடிவருவாள்!'' என்று ஒரு காவியம் போல் தனது கடல் அனுபவத்தை விவரிக்கிறார், சுபாஷ் என்ற 25 வயது மீனவ இளைஞர்.

கீச்சான்குப்பம். நாகப்பட்டினம் துறைமுகத்திலுள்ள மீனவக் குப்பம். சுனாமி பேரழிவுக்கு சகலத்தையும் பறி கொடுத்த இன்னொரு மீனவ கிராமம். மனிதர்கள் வாழ்ந்த சுவடு தவிர மற்றவை எல்லாம் அங்கு மண்மேடாகிப்

குப்பைக் கூளங்கள் போல் கொட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட மீனவர்கள்: சாவிலும் கூட அவமதிக்கப்படும் அவலம்.





படிப்பகம்

www.padippakam.com

போனது! அதில் தப்பிப் பிழைத்த இளைஞர்களில் ஒருவர்தான் சுபாஷ்.

'ஏட்டறிவு இல்லையே' என்று ஏங்கும் அந்த இளைஞனின் கடல் அறிவின் ஆழம் கேட்பவருக்கு பிரமிப்பை ஏற்படுத்தும்.



படம்: சேகர்

மீன்பிடிப்பதைத் தனது உயிர் மூச்சாகக் கருதி வாழும் இளைஞர் சுபாஷ், (சட்டை அணியாமல் இருப்பவர்) தனது சுற்றத்தார்களுடன்.

ஒரு நிபுணனுக்கே உரிய அறிவியல் பார்வையும் வீரனுக்கே உரிய விவேகமும் சேர்ந்ததுதான் அவருடைய மீன் பிடித் தொழிலின் ஞானம்!

ஏதோ, கடலில் வலையை வீசி, வலையில் மாட்டும் மீனை மட்டுமே எடுத்து வந்து கரையில் விற்கும் தமிழ் சினிமாவில் வரும் மீனவர் அல்ல. வஞ்சிரம், கொடுவாள், வௌவ்வால் என்று குறிப்பிட்ட மீனை மட்டுமே குறி வைத்து வேட்டையாடும் கைத்தேர்ந்த கடல்வேட்டை நிபுணர் அவர்.

இதற்காக, ஜப்பான் நாட்டு 'இசுசு' இன்ஜின், கடலில் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைக் காட்டும் 'ஜி.பி.எஸ்' கருவி, ஆஸ்திரேலியா நாட்டில் தயாரான போலி மீன்களைக் கொண்ட தூண்டில்கள், வெளிநாட்டு வலைகள், சாவை எதிர்க்கொள்ளும் துணிவுள்ள சக மீனவ இளைஞர்கள் - திருமணம் ஆகாதவர்கள் மட்டும் - என்று குறிப்பிட்ட மீன் கூட்டத்தை மட்டும் தாக்கும் தற்கொலைப்படை வீரர் போல் கடலில் வாழ்ந்தவர்.

மீன் பிடித் தொழிலை, வீர விளையாட்டு போன்று தனக்கேயுரிய ஈர்ப்புடன் செய்தவர், சுபாஷ். தான் தேடும் மீன் கூட்டம் இலங்கை கடற்பரப்பில் தான் அதிகம் என்பதால் அக்கடற் பரப்பில்தான் மீன் வேட்டைக்காக அதிக நாட்கள் திரிந்திருக்கிறார்.

அப்போது, இலங்கை கடற்படை பலமுறை அவரை ஜட்டியோடு படகில் படுக்க வைத்து மிதித்து இருக்கிறது. ''இனிமேல் வரமாட்டேன்'' என்று ஏராளமான முறை சொல்லியிருக்கிறேன் என்று வெள்ளேத்தியாகச் சிரிக்கிறார். விடுதலைப் புலிகள் 'டேய் பொடியன்களா' என்று பாசத்துடன் பழகுவார்கள். பெண் புலிகள், எங்கள் சாப்பாட்டு பாத்திரத்தை கண்டால் விடாதுகள், உரிமையுடன் பிடுங்கிக் கொள்ளுவார்கள் என்று கடல் சம்பவங்களை அலையாக மோத விடுகிறார்.

''என்னைப் போன்று பல இளைஞர்கள் எங்கள் கிராமத்தில் என் கண்ணெதிரே இறந்தார்கள். படகு ஓட்ட வாங்கிய மண்ணெண்ணையை ஊற்றித்தான் எம்மக்களை கொத்து கொத்தாக எரித்தோம். தினமும் 300 லிட்டர்! 3 நாட்களுக்குப் பிறகும் பிணங்கள் குறையவில்லை. சவக்குழி தோண்டவே வலுவற்றுப் போனோம். சுடுகாட்டின் மீதுதான், புதைத்த பிணங்களோடு தான் இப்போது வாழ்கிறோம். அழிந்தது, எங்கள் உயிர்கள் மட்டுமல்ல, எங்களின் 25 ஆண்டுகால வாழ்க்கையின் உழைப்பு! எல்லாம் உடைந்த படகுகள் போல் நாசமாகிப் போனது! எப்படி இனி நாங்கள் பழைய வாழ்க்கைக்கு திரும்புவோம்?'' என்கிறார், வெறித்துப் பார்த்தப்படி.

''கடலில் இருந்தால் உயிரோடு திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையிருந்தது. ஆனால், கரையில் அந்த நம்பிக்கை எனக்கு இல்லை'' என்கிறார் நொறுங்கி போய்.

கடலூர், தேவனாம்பட்டினம், புதுக்குப்பம், நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை, கீச்சான்குப்பம், வேதாரண்யம், வேளாங்கண்ணி என்று நாம் சென்று பார்த்த மீனவக் குப்பங்கள் பேரழிவு நடந்த தனித்தனி தீவுகளாகக் கரையில் ஒதுங்கியிருக்கின்றன. அம்மீனவர்களைச் சங்கிலித் தொடர்போல் தாக்கிய துயரங்களும் ஆளுங்கும்பல்களால் அவர்கள் பட்ட அவமானங்களும் சொல்லி மாளாது! மீனவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட ஆறாத ரணமாக அதை உணர்கிறார்கள்.

நிவாரணம் வழங்குகிறோம் என்ற பெயரில் அதிகார வர்க்கமும் அரசியல் வாதிகளும் அவமானப்படுத்தியதை அதிர்ச்சியுடன் விவரிக்கிறார்கள். காணாமல் போன தங்கள் குழந்தைகளை, மனைவியை, தாயைத் தேடும் வலுவிழந்து அதிகாரிகளிடம் புகார் சொன்ன போது, ''பிணத்தைக் காட்டி பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்ற குரூரத்தை அவர்களால் மறக்க முடியவில்லை.

'சுனாமி வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன் அரசு எங்களுக்கு அறிவித்திருந்தால் கூட அனைவரும் தப்பியிருப்போம். பேரழிவு நடந்த பிறகாவது, உடனே வந்து காப்பாற்றியிருந்தால் பல குழந்தைகள் பிழைத்திருக்கும். எங்கள் மனைவி, குழந்தைகளை நாங்களே தேடித் தேடி புதைத்தோம். முழுதாக இரண்டு நாட்கள் கழித்து பிணமாக இருந்த தாயின் அணைப்பிலிருந்து உயிருடன் ஒரு குழந்தையை மீட்டோம்! வடிந்த வெள்ளத்திற்கு மத்தியில் தன் தாய் என்று நம்பி பிணத்தின் மீது அமர்ந்திருந்த ஒரு குழந்தையையும் உயிருடன் மீட்டோம்! என்று நெஞ்சைப் பிளக்கும் சம்பவங்களைத் தொடர்ச்சியாகச் சொல்ல முடியாமல் அழுகிறார்கள்! எல்லாம்

> ''அழிந்து போனது எங்கள் உயிர்கள் மட்டுமல்ல; எங்களின் 25 ஆண்டுகால வாழ்க்கையின் உழைப்பு! இனி பழைய வாழ்க்கைக்கு எப்படித் திரும்புவோம்?''
>
> – சுபாஷ், அக்கரைப்பேட்டை.



படிப்பகம்

www.padippakam.com

கழிந்து 3 நாட்களுக்கு பிறகுதான் எங்களை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், இராணுவத்தினரும் வந்து வேடிக்கை பார்த்தனர்!' - இந்த அதிர்ச்சியிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை.

சடலங்களை அகற்றுவது என்ற பெயரில், மனிதக் கழிவுகள் போல் அவற்றின் மேல் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் மண்ணை மூடியதை அவர்களால் மறக்க முடியவில்லை!



படம்: சேகர்

''உங்களுக்காக உயிரைக் கொடுத்திருக்கிறோம்; எங்களை எப்பொழுது கடலுக்கு அனுப்புவீர்கள்?'' எனக் கேட்கும் தேவனாம்பட்டினம் கட்டுமர மீனவர்கள்.

குண்டுவெடிப்பு, விமான விபத்துகளில் சாகும் அரசியல் தலைவர்களின் சிதறிய சதைகளையும் விடாமல் சேகரித்து, 'அரசு மரியாதையுடன் புதைக்கும்போது, உழைக்கும் மக்களின் அடக்கம் கூட ஏன் கௌரவமாக நடக்கவில்லை? அவர்களும் இந்நாட்டு மக்கள்தானே!

அதுமட்டுமல்ல, சொந்த நாட்டின் பேரழிவுத் துயரங்களைக் கூட, வியாபாரமாக்குகிறது, ஆளும்கும்பல்! 'ஆடித் தள்ளுபடி' பாணியில் 'சுனாமி நிவார்ண நிதி தருவீர், வரிவிலக்கு பெறுவீர்' என்று கறுப்பு பண முதலைகளிடம் கடைவிரிக்கிறது. அதேபாணியில்தான் உழைக்கும் மக்களின் சிந்தனையையும் சீரழிக்கிறது. ''சுனாமி நிவாரணத்திற்கு பணம் கொடுத்து விட்டோம்! பிணம் தூக்கிவிட்டோம்! ஏழைகளுக்கு உதவ ஆண்டவன் எமக்கு வாய்ப்பு கொடுத்தான்'' என்று கூறி விட்டு சொந்த வேலையில் உடன் மூழ்கிவிட்டார்கள், நடுத்தர மக்கள்.

ஆனால், சுனாமி பேரழிவு திரும்பவும் தாக்கினால், மீனவர்கள் தற்காத்துக் கொள்வது எப்படி என்ற சிறு அறிவியல் உண்மையைக் கூட அரசு இன்னும் விஞ்ஞானப்பூர்வமாக விளக்கவில்லை.

''சுனாமி மீண்டும் வராது. வதந்தியை நம்பாதீர்கள்'' என்று போலீசு மூலம் திடீரென அறிவிப்பு செய்யும் அரசாங்கம், சுனாமி என்பது என்ன? ஏன் மீண்டும் வராது என்று ஒரு பிரசுரம் கூட விநியோகிக்கவில்லையே, ஏன்? என்று கேட்கிறார், 4-வது வகுப்பு மட்டுமே படித்த அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர் இளைஞர் சந்திரன்.

இப்போது கடலோர மீனவக் குப்பங்கள் கல்லறைத் தீவுகளாகக் காட்சியளிக்கின்றன! அன்புக் குழந்தைகளையும் அனைத்து உடைமைகளையும் இழந்து தவிக்கும் மீனவக் குடும்பங்களுக்கு இருக்கும் ஒரே சொத்து, சுபாஷ், சந்திரன் போன்ற ஓராயிரம் மீனவ இளைஞர்கள்தான்! இவர்கள் மீண்டும் நம்பிக்கையோடு வாழ்க்கையைத் துவக்குவதுதான். அவர்கள் திரும்பவும் உயிர் வாழ்வதற்குள்ள ஒரே வழி! அவர்கள் மீண்டும் தொழிலுக்கு போவதுதான், அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய ஆரம்ப நிவாரணம்!

வசிப்பதற்கு வீடு! வாழ்வதற்கு தொழில்! இதுதான் அவர்களுடைய கோரிக்கை!

கறுப்புப் பண முதலாளிகள் போல் அவர்கள் அரசாங்கத்திடம் பட்ஜெட்டில் பல ஆயிரம் கோடிகள் வரிச் சலுகைகள் கேட்கவில்லை! நாட்டையே சூறையாடும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் போல் சகலமும் - நிலம் , நீர் மின்சாரம், சாலை, சந்தை - எங்களுக்கு இலவசமாக வேண்டும் என்று கோரிக்கை வைக்கவில்லை! கறுப்புப் பண முதலைகள் போல், 'வருமானத்திற்கு வரி கட்ட மாட்டோம், எதிர்த்தால் ஆட்சியைக் கவிழ்ப்போம்' என்று அரசாங்கத்தை மிரட்டவில்லை. பங்குச் சந்தை முதலைகள் போல பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்று வங்கியை ஏமாற்றவில்லை! எங்களைத் தொழிலுக்கு அனுப்புங்கள் என்றுதான் கோருகிறார்கள்!

இதுநாள்வரை, அரசிடமிருந்து 'காதறுந்த ஊசி'யைக் கூடப் பெறாமல் பல ஆயிரம் கோடி அந்நியச் செலாவணியை ஆண்டுதோறும் அரசுக்கு இலவசமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அரசு உதவியின்றி தங்களின் சொந்த மூலதனம், தொழில் அனுபவம், மூளைத் திறன்'ஆகியவற்றைக் கொண்டுதான் ஆண்டுதோறும் மீனவர்கள் மீன் உற்பத்தியைப் பெருக்கி, மக்களுக்குத் தேவையான, அடிப்படையான புரத உணவை மலிவு விலையில் கொடுத்தார்கள். இதுநாள் வரையில் தாம் பிறந்த மண்ணுக்கு, சக மனிதர்களுக்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஊட்டத்தைக் கொடுத்தவர்கள்! இப்போது தங்கள் சொந்தங்களை இழந்து, செல்வங்களை இழந்து, அநாதைகளாக நிற்கிறார்கள்!

நாம், என்ன செய்யப் போகிறோம்! 'இதோ! நாங்கள் இருக்கிறோம்! உங்கள் உப்பைத் தின்றவர்கள்' என்று ஓடி அவர்களின் உரிமைக்குத் தோள் கொடுக்க வேண்டாமா?

'இல்லை! நாங்கள் பணம் கொடுத்து விட்டோம்! பிணம் தூக்கி விட்டோம்!' என்று சொல்லிவிட்டு ஆளும் கும்பல் போல் அடுத்த பிணத்திற்குக் காத்திருக்க போகிறோமா?

**நாட்டையே சூறையாடும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் போல் நிலம், நீர், மின்சாரம், சாலை, சந்தை என எல்லாவற்றையும் பட்டா போட்டுக் கொடுக்கும்படி மீனவர்கள் கேட்கவில்லை. வசிப்பதற்கு வீடு! வாழ்வதற்குத் தொழில்! - இதுதான் அவர்களுடைய கோரிக்கை.**

நாகப்பட்டினத்திலிருந்து
பச்சையப்பன், ஆசாத்
கடலூரிலிருந்து
ஷகீல் அகமது, தீனதயாளன்,
சேகர்.


படிப்பகம்

# மோட்டாண்டி தோப்பு - மணியன் தீவு

# நிலத்தை இழந்த விவசாயிகள் அலட்சியப்படுத்தும் அதிகார வர்க்கம்

வேதாரண்யம் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த மோட்டாண்டி தோப்பிற்குள் நாங்கள் நுழைந்தவுடனேயே, எங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட விசாரிக்காமல், ''இனி வெளியூர் போய் தான் பொழைக்க முடியும்'' எனத் தனது துயரத்தைக் கொட்டித் தீர்த்தார், நாகம்மா என்ற பெண். அவர், தனது ஒரு ஏக்கர் நிலத்தில் பயிரிட்டிருந்த நெற்பயிரை, ஊருக்குள் புகுந்த சுனாமி பேரலைக் கருக்கி விட்டது. சுனாமி பாதிப்பு பற்றியும், அதிகாரிகள் நிவாரணம் வழங்குவதில் சாதி வித்தியாசம் பார்ப்பது பற்றியும் எங்களிடம் சொல்லிக் கொண்டே, வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மற்ற பெண்களையும் வந்து சொல்லுமாறு குரல் கொடுத்தார், நாகம்மா.

94 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வசிக்கும் மோட்டாண்டி தோப்பில் மட்டுமல்ல, வேதாரண்யத்தை ஒட்டியுள்ள ஆர்க்காட்டுத் துறையில் இருந்து கோடியக்கரை வரையிலும் சுனாமி பேரலை தாக்கி நெல்லும், கடலையும் கருகிப் போய்க் கிடக்கின்றன. கடற்கரையில் இருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில் உள்ள விளைநிலங்களில் கூட கடல்நீர் உட்புகுந்து, பயிர்களைப் பாழடித்திருக்கிறது. தமிழகத்தின் வேறெந்தப் பகுதியிலும் இந்த அளவிற்கு கடல்நீர் ஊருக்குள் நுழையவில்லை என்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள். மேல் பகுதியில் காய்ந்து போய்க் கிடக்கும் நிலங்களைக் கைவிரலில் கீறிப் பார்த்தால், கழிப்புதான் வருகிறது. அந்த மண்ணை வாயில் வைத்தால் கடல் நீர் போல உப்பு கரிக்கிறது.

மோட்டாண்டி தோப்பும், அதன் அருகில் உள்ள மணியன் தீவும் வானம் பார்த்த பூமி. கடற்கரை அருகில் இருந்தால் கூட, மீன் பிடிப்பதை விட, விவசாயமும், உப்பளமும்தான் இங்கே முக்கியத் தொழில். கடலை ஒட்டியுள்ள மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு, இந்தப் பகுதி விவசாயிகள் கரிப்பு நெல் ரகத்தைப் பயிரிட்டிருந்தார்கள். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு, இந்த ஆண்டு பெய்த மழை விளைச்சல் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி இருந்தது. ஆனால், இப்பொழுது கருகிப் போய்க் கிடக்கும் நெற்பயிரைக் காட்டி, ''நாங்கள் ஆசைப்பட்டது போல விளைச்சல் நன்றாக இருந்ததெல்லாம், இந்த சுனாமி வந்து சாப்பிடுவதற்கா?'' என விரக்தியோடு கேட்கிறார், குழந்தைவேலு என்ற விவசாயி.

காவிரி கடைமடைப் பகுதியான நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் 74,130 ஏக்கர் பரப்பில் விளைந்திருந்த நெல்லும், கடலையும் முற்றிலுமாக அழிந்து போய் விட்டன. இந்தப் பயிர் சேதத்தின் மதிப்பு மட்டும் ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு மேலிருக்கும். சுனாமி பேரலையில் மாட்டிக் கொண்டு இறந்து போன ஆடு, மாடு ஆகிய கால்நடைச் செல்வங்களின் மதிப்பு இந்தக் கணக்கில் அடங்காது. சுனாமியால் தென்னைக்கும், முந்திரிக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றி இனிமேல்தான் தெரியவரும் என விவசாய சங்கங்கள் அறிவித்துள்ளன. (தி ஹிந்து, 21.1.05)

''இந்த விளைநிலங்கள் அனைத்திலும் ஏறத்தாழ 3 அடி ஆழத்திற்கு கடல் நீர் இறங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு உப்புத் தன்மை கொண்ட நிலத்தில் எந்த நெல்லையும் பயிரிட முடியாது. மீண்டும் சாகுபடி செய்ய குறைந்தபட்சம் நான்கு ஆண்டுகள் ஆகலாம்'' என கடலூர் மாவட்ட வேளாண் அதிகாரி தெரிவித்திருக்கிறார். (தினமணி, 11.1.05)

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள், தங்களின் படகுகள், கட்டுமரங்கள், வலைகள் போன்ற தொழில் கருவிகளைத்தான் இழந்திருக்கிறார்களே தவிர, தங்களின் தொழிலுக்கு அடிப்படையான கடலை இழக்கவில்லை. ஆனால், சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளோ, விவசாயத்திற்கு அடிப்படையான விளைநிலங்களைக் காவு கொடுத்து விட்டு நிற்கிறார்கள்.

வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றங்கள் கூட, விவசாயிகளிடமிருந்து பறிக்காத நிலத்தை, சுனாமி பறித்து விட்டது. உப்பாகிக் கிடக்கும் நிலத்தை மீண்டும் சாகுபடிக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க இன்னும் எத்தனை காலம் பிடிக்குமோ என்ற கவலையே விவசாயிகளை நடைப்பிணமாக்கி வருகிறது.

சுனாமியால் உப்பாகிப் போன நிலத்தைச் சீரமைக்க நான்கு ஆண்டுகள் போதும் என்கிறார்கள் அதிகாரிகள். ஆனால், விவசாயிகளோ, தங்களின் சொந்த அனுபவத்தில் இருந்து வேறொரு கணக்குச் சொல்கிறார்கள். ''1955-ஆம் ஆண்டு வாக்கில் வேதாரண்யம் பகுதியைத் தாக்கிய பெரும் புயலால், நிலங்கள் அனைத்தும் கடல்நீர் புகுந்து உவராகிப் போனதாகவும், 1975-க்குப் பின்புதான் அந்த

**சுனாமியால் விவசாய நிலம் கழிப்பாகிப் போனதைக் காட்டும் மோட்டாண்டி தோப்பைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி.**



படம்: சேகர்

www.padippakam.com

நிலங்களில் விவசாயம் செய்ய முடிந்ததாகவும்'' மணியன் தீவு விவசாயிகள் சொல்கிறார்கள்.

''உப்பாகிப் போன நிலம் முழுவதிலும் புதிய தண்ணீரைப் பாய்ச்சி, ஜிப்சம் போட்டு வந்தால் நிலத்தைச் சீரமைத்து விடலாம்'' என வேளாண் அதிகாரிகள் கூறுகிறார்கள். இது, ஒன்னும் ஒன்னும் ரெண்டு என்பது போல கேட்பதற்கு எளிமையானதாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில், இது விவசாயிகளின் அன்றாட வாழ்க்கை பிரச்சினையோடு சம்மந்தப்பட்டது என்பதை அதிகார வர்க்கம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் கிராமங்கள் காவிரியின் கடைமடை பகுதியில் அமைந்திருந்தாலும், அங்கு விவசாயம் காவிரியாற்றுத் தண்ணீரை நம்பி நடைபெறவில்லை. மழையை நம்பியும், நிலத்தடி நீரை நம்பியும்தான் நடந்து வந்தது. தற்பொழுது சுனாமியின் தாக்குதலால் பெரும்பாலான பகுதிகளின் நிலத்தடி நீர் மாசுபட்டுப் போய் விட்டது. மோட்டாண்டி தோப்பு, மணியன் தீவு பகுதி விவசாயிகள், தங்களின் குடிநீர்த் தேவைக்கே வேதாரண்யம் நகரிலிருந்து தண்ணீர் லாரி வருமா என எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதைப் பற்றி அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

அப்படியே நிலத்தடி நீரை எடுத்துப் பாய்ச்சுவது என்றால், நீர் இறைக்க இலவசமாக மின்சாரம் தருவார்களா? கிணறு வறண்டு போனால், புதிதாக கிணறு தோண்டுவதற்கு அரசாங்கம் மானியம் தருமா என அடுக்கடுக்காக எழும் கேள்விகளுக்கு அதிகாரிகளிடமிருந்து பதிலே இல்லை.

''நான்கு ஆண்டுகளுக்கு விவசாயம் செய்ய முடியாது என்பதால், நான் குடும்பத்தைக் காப்பாற்ற வேறு வேலைக்குப் போக வேண்டும். நான் வேற வேலைக்குப் போனால், எனது நிலத்தைச் சுத்தம் செய்யாமல் தரிசாகப் போட வேண்டியதுதான்; வேறு வேலைக்குப் போகாமல் நிலத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினால் குடும்பத்தைப் பட்டினி போட வேண்டியது தான்'' எனத் தனது இக்கட்டான சூழ்நிலையை முன்னுணர்ந்து கூறுகிறார், குழந்தைவேலு என்ற விவசாயி.

சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆகிவிட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயக் கிராமங்கள் அனைத்திலும் வேலைக்கு உணவுத் திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டும் என விவசாய சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. ஆனால், அரசாங்கமோ, மீனவர்களின் பிரச்சினையைக் காட்டி விவசாயிகளைப் பின்னுக்குத் தள்ளுகிறது. இதன் மூலம் ஒருவருக்கு எதிராக மற்றொருவரைக் கொம்பு சீவி விடப் பார்க்கிறது.



படம்: சேகர்

உரிய நிவாரணம் வழங்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்ட புதுவை மாநிலத்தைச் சேர்ந்த கீழவாஞ்சூர் விவசாயிகள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களில் இறால் பண்ணைகளையும், மீன் பண்ணைகளையும் அமைக்கலாம் என்ற பிரச்சாரத்தை ஏற்கனவே பொருளாதார நிபுணர்கள் தொடங்கிவிட்டார்கள். சுனாமி தாக்குதலின் பொழுது, இறால் பண்ணை அல்லாத இடங்களை விட, அப்பண்ணைகள் இருந்த இடங்களில்தான், கடல்நீர் வெளியேற முடியாமல், பாதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளது. இறால் பண்ணைகள் சுனாமியை விட பேரபாயம் நிறைந்தவை என்பதை மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, இறால் பண்ணைகளை எதிர்த்து அவர்கள் நடத்திவரும் போராட்டங்களே இதற்கு சாட்சி.

எனினும் வாழைப்பழத்திற்குள் கசப்பு மருந்தை மறைத்து வைத்துக் கொடுப்பதைப் போல, சுனாமி பாதிப்புக்கு இறால் பண்ணைகளைத் தீர்வாகக் காட்டுகிறார்கள்; ஆபத்தை விலை கொடுத்து வாங்கச் சொல்லுகிறார்கள்.

மீனவர்களுக்குப் போலவே, விவசாயிகளுக்கும் நிவாரணத்தின் ஒரு பகுதியைக் கடனாகத்தான் வழங்குவோம் என அரசு முடிவெடுத்தால், நிபுணர்களின் திட்டம் பாதி நிறைவேறிவிடும். ஏற்கனவே வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் திணறும் விவசாயிகளின் தலை மீது புதிதாகக் கடனை ஏற்றுவது, அவர்களைத் தற்கொலைக்குத் தள்ளும்; இல்லையென்றால், விவசாயத்தில் இருந்தே அப்புறப்படுத்தி விடும்.

இது மட்டுமின்றி, விளை நிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களிடமும், உள்நாட்டு தரகு முதலாளிகளிடமும் பட்டா போட்டுக் கொடுப்பதற்காகவே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது. ஒப்பந்த விவசாயம் என்ற பெயரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை இந்தத் திட்டத்திற்குப் பலியாக்கவும் ஆளும் கும்பல் முயலக் கூடும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு உப்பாகிப் போன நிலங்களைச் சீர்திருத்த நான்கு ஆண்டுகள் ஆகுமென்றால், அந்த நான்கு ஆண்டுகளுக்கும் விவசாயிகளின் அத்தியாவசியத் தேவைகள் — நிலத்தைச் சீரமைக்கத் தேவைப்படும் நீரில் தொடங்கி விவசாயிகளின் குடும்பப் பராமரிப்பு வரை — அனைத்தையும் அரசாங்கம் தான் முழுப் பொறுப்பேடுத்து நிறைவேற்றித் தர வேண்டும். இதற்குக் குறைவானது எதுவும் முழுமையான நிவாரணம் ஆகாது. மாறாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளை நிலத்தில் இருந்து அப்புறப் படுத்தும் சதித் திட்டமாகவே அமையும்.

**● வேதாரண்யத்திலிருந்து**
**சேகர், தசரதன்**

www.padippakam.com

# சோறு-துணிமணி-கடன்:

# மீனவர் வாழ்வை மீட்குமா?

*"குழந்தைக்கு ஏதாவதொன்னு ஆச்சுன்னா, அம்மாவைத்தான் கேட்பாங்கள்."*

இந்தத் தகவல் தொழில் நுட்ப புரட்சி யுகத்தில், சுனாமி தாக்குதலை முன்னறிந்து சொல்லும் திறன் இந்தியாவிடம் இல்லை என்பதை நம்ப முடியுமா என்று (நாங்கள்) கேட்டபோது, நாகப்பட்டினத்திலுள்ள அக்கரைப் பேட்டை மீனவப் பகுதியைச் சேர்ந்த பூங்கோதை இப்படி பதில் அளித்தார்.

ஒரு தாயைப் போலத் தனது குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள இந்திய அரசோ, "சுனாமியைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம் என்னிடம் கிடையாது; எனவே, இந்தப் பேரழிவிற்கு தான் எவ்விதத்திலும் பொறுப்பேற்க முடியாது" எனக் குற்ற உணர்ச்சி சிறிதும் இன்றி நடந்து கொள்கிறது.

தொழில்நுட்பம் கிடையாது என்பது அரை உண்மைதான். இந்திய அரசு கொஞ்சமாவது பொறுப்புடன் நடந்து கொண்டிருந்தால், இருக்கின்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே இந்தப் பேரழிவை ஓரளவு தடுத்திருக்க முடியும் என அரசுக்கு ஆதரவான பத்திரிகைகளே அம்பலப்படுத்தியுள்ளன.

"... இந்திய அரசின் விண்வெளித் துறையில் உருவாக்கப்பட்ட அதிநவீன சேட்லைட்டான (செயற்கை கோள்) ஐ.ஆர்.எஸ். எனப்படும் இந்தியன் ரிமோட் சென்சிங் சேட்லைட் - பி3 மற்றும் ஐ.ஆர்.எஸ். - பி4 என்பவை, கடல் கொந்தளிப்பு உள்ளிட்டவற்றைத் துல்லியமாக அறிய வல்லவை. என்ன பலன்? இந்த சேட்லைட்களைப் பயன்படுத்தும் அதிகாரம் ஒரு அமெரிக்க நிறுவனத்திடம் உள்ளது. நமது நாட்டின் நேஷனல் ரிமோட் சென்ஸிங் ஏஜென்சிக்கு இதைப் பயன்படுத்தும் அதிகாரம் இல்லை" என்று எழுதுகிறது, துக்ளக் (துக்ளக், 12.1.2005)

"சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைக் கண்டறிந்த இந்திய வானியல் துறை, அது பற்றிய தகவலை இரண்டு மணி நேரம் கழித்துதான் மைய அரசின் தேசியப் பேரிடர் மேலாண்மை அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறது. இந்த தாமதத்துக்குக் காரணம் அதிகார வர்க்க சிவப்பு நாடாத்தனம்" என தி ஹிந்து நாளிதழ் சுட்டிக் காட்டியுள்ளது. (தி ஹிந்து, 1.1.2005)

".... சென்னைக்கு சுனாமி வருவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக, அலை அந்தமானைத் தாக்கி மூழ்கடித்த விபரம் இந்திய வானிலைத் துறைக்குத் தெரியுமாம். இருந்தும் கூட சரியான முயற்சி எடுத்து தமிழகத்தை எச்சரிக்கை செய்யவில்லை..." என குங்குமம் வார இதழ் அம்பலப்படுத்தியிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, தமிழகத்தில் சுனாமி ஏற்படுத்திய பாதிப்புகளை மதிப்பிட்டுள்ள மனித உரிமைக் குழுவைச் சேர்ந்த அ. மார்க்ஸ், ப. சிவக்குமார் ஆகியோர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள பேட்டியில், "உவர் நிலக் காடுகள் அழிக்கப்பட்டு தொழிற்சாலைகள் மற்றும் பீச் ரிசார்ட்ஸ் (கடற்கரையோர விடுதிகள்) கட்டப்பட்ட இடங்கள், இறால் பண்ணைக்காக குழிகள் தோண்டிய இடங்களில் பாதிப்பு அதிகம் இருந்ததையும் (எ.டு. நாகப்பட்டினம்); உவர் நிலக் காடுகள் இருக்கும் இடங்களில் பாதிப்பு குறைவாக இருந்ததையும் (பிச்சாவரம்)" சுட்டிக் காட்டியுள்ளனர். (தினகரன், 23.1.05)

"அலையாத்திக் காடுகள் மிகுந்துள்ள முத்துப்பேட்டையிலும், பவழப் பாறைகள் நிறைந்த ராமேசுவரத்திலும் அழிவு இல்லை. வேதாரண்யக் காடுகள் அழிந்ததால், நாகையில் அழிவு. கடிலம் என்ற ஆறு கல்க்கும் கழிமுகம் சாக்கடையானதால் கடலூர், பாண்டியில் அழிவு" எனச் சுட்டிக் காட்டுகிறது தினமணி. (தினமணி, 12.1.05)

சுனாமி ஆபத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்க இந்திய அரசு தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தவில்லை; இயற்கையாக இருந்த அரண்களையும் தனது பொருளாதாரக் கொள்கைக்காக (இறால் பண்ணைகள், கடலோர விடுதிகள்) அழித்துவிட்டது. எனவே, இந்தப் பேரழிவை ஊழ்வினைப் பயன், விதியின் விளையாட்டு என விட்டுவிட முடியாது. மாறாக, இதற்கான முழு பொறுப்பையும் ஆளுங் கும்பல்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கான மக்களையும், அவர்களது உடைமைகளையும் காக்கத் தவறிய **குற்றத்திற்கான தண்டனை** என்ற விதத்தில் தான், நிவாரண உதவிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், மைய அரசும், மாநில அரசும், ஓட்டுக் கட்சிகளும் நிவாரண உதவிகளை வழங்குவதில், தங்களை வள்ளல்களாகவும், பாதிக்கப்பட்ட மக்களைத் துரதிருஷ்டசாலிகளாகவும் காட்டுகின்றன. மைய அரசும், தமிழக அரசும் நிவாரண உதவி வழங்குவது குறித்து ஒவ்வொரு நாளும் ஒரு அறிக்கை விடுவதன் மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகலவிதமான உதவிகளையும் தங்கு தடையின்றி செய்து கொண்டிருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

அங்கொன்று, இங்கொன்றாக நடைபெறும் ஊழல்கள், அதிகாரிகளின் மெத்தனம் இவற்றைத் தவிர நிவாரண உதவி வழங்குவதில் வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பது போல சன் டி.வி.யும், பத்திரிகைகளும் நடந்து கொள்கின்றன. இதைத்தாண்டி பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய தேவைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் கருணாநிதி கூட வாயைத் திறப்பது கிடையாது. ஊழலைத் தடுக்க ஒரு சர்வ கட்சி கமிட்டியை உடனே போட்டு இவர்களின் வாயை அடைக்கிறார், ஜெயா.

சுருக்கமாகச் சொன்னால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு - குறிப்பாக மீனவர்களுக்கு எல்லா உதவியும் கிடைத்து விட்டது. இனி, அவர்கள் பயத்தை விட்டுவிட்டு கடலுக்குப் போக வேண்டியதுதான் பாக்கி என்ற கருத்தை பொது மக்களிடம் உருவாக்க ஆளுங் கும்பல்களும், பத்திரிகைகளும் கைகோர்த்துக்


படிப்பகம்

கொண்டு முயலுகின்றன.

**நிவாரணம் அல்ல; சுயதம்பட்டம்**

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் சனவரி மாத மத்தியிலேயே கடலுக்குப் போகத் தொடங்கிவிட்டதாகப் பத்திரிகைகளில் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. ஆனால், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சுபாஷ் என்ற மீனவ இளைஞரோ, ''நாங்க மீன் சமைச்சு சாப்பிடறதுக்குக் கரையோரம் வலையைப் போட்டாக்கூட தொழிலுக்குத் திரும்பிவிட்டதாக விளம்பரம் பண்ணுகிறார்கள்'' என விரக்தியோடு குறிப்பிடுகிறார்.



காற்றுப் புகக் கூட ஜன்னல் இல்லாமல் தமிழக அரசு கட்டி வரும் இந்தத் தகரக் கொட்டகைகளை வீடென்றா சொல்ல முடியும்?

கடலூர் - தேவனாம்பட்டினம் கிராமத்தில் சுனாமியால் பழுதான படகு இன்ஜின்களை இராணுவம் பழுது பார்த்துக் கொடுத்து விட்டதாகப் படத்தோடு செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால், அக்கிராம மீனவர்களோ ''இது ஒரு மலிவான பிரச்சாரம்'' எனக் குமுறுகிறார்கள்.

அக்கிராம மீனவர்கள், ''இன்ஜினை உள்ளூர் மெக்கானிக்கிடம் பழுது பார்ப்பதுதான் எங்களுக்கு வசதி; அதற்குத் தேவைப்படும் பணத்தை எங்களிடம் கொடுங்கள்'' எனக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இராணு அதிகாரிகளோ, ''ஐயாயிரம், ஆறாயிரம் செலவழித்து இன்ஜினைப் பழுது பார்க்க முடியாது; பழுது பார்க்க 1,500 ரூபாய் தான் ஒதுக்க முடியும்; அதையும் பணமாகத் தர மாட்டோம்; இராணுவ மெக்கானிக்குகள் தான் பழுது பார்ப்பார்கள்'' எனத் தங்களின் 'சேவைக்கு' வரம்பிட்டுக் கொண்டார்கள்.

''இன்ஜினைப் படகில் பொருத்தி இரண்டு, மூன்று முறை கடலுக்குப் போய்விட்டு வந்தால் தான், படகும், இன்ஜினும் நன்றாக இருக்கிறதா என முடிவு செய்ய முடியும். ஆனால், இராணுவமோ இன்ஜினின் பாகங்களை மண்ணெண்ணெயில் கழுவி மாட்டி, கரையில் வைத்து இன்ஜினை ஓட்டிக் காட்டிவிட்டு, படகுகளைத் தயார் செய்துவிட்டதாக ஃபோட்டோ எடுத்துக் கொண்டது'' என தேவனாம்பட்டின மீனவர்கள் உண்மையைப் புட்டு வைக்கிறார்கள்.

''படகை ரிப்பேர் செய்வது வெல்டிங் பத்த வைப்பது போன்றதல்ல. ஒரு குண்டூசி அளவுக்கு ஓட்டை இருந்தால் கூட, ஃபைபர் படகு கடலில் மூழ்கிப் போய்விடும். ஆனால், மீன்வளத் துறையோ, படகுகளைக் கண்ணாலேயே அளந்து, இது நல்ல போட் எனக் கறுப்பு மையைத் தடவி நம்பர் போட்டு விட்டுச் செல்கிறது.''

''நாகப்பட்டினம் துறைமுகத்தைச் சுத்தம் செய்யாமல், நாங்கள் தொழிலுக்குப் போக முடியாது. துறைமுகத்தை உடனே சுத்தம் செய்ய ஆரம்பித்தால் கூட, தொழிலுக்குப் போக குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும்'' என்கிறார்கள் மீனவர்கள். ஆனால், அரசோ சுனாமியால் உடைந்த படகுகளைக் கூட இன்னும் முழுமையாக அப்புறப்படுத்தவில்லை.

கட்டுமரத்தைப் பழுது பார்க்கவும், வலைகள் வாங்கவும் 10,000 ரூபாய் பணம் கொடுத்திருப்பதாக அரசு கூறுகிறது. மீனவர்களோ, ''எங்களிடம் குறைந்தது ஐந்து வகையான வலைகள் இருந்தால்தான் தொழிலுக்கே போக முடியும்; வலையின் விலை, அதன் இரகத்துக்கு ஏற்ப 20,000 ரூபாயில் இருந்து 1,00,000 ரூபாய் வரை விற்கும். இந்தப் பத்தாயிரத்தை வைத்துக் கொண்டு வலையில் வரும் கட்டைகளைக் கூட வாங்க முடியாது'' என்கிறார்கள். இதனாலேயே பல கிராமங்களில் இந்தப் பணத்தை வாங்காமல் புறக்கணித்து விட்டார்கள்.

மேலும், இந்தப் பணமும் எல்லா கட்டுமர மீனவர்களுக்கும் வழங்கப்படவில்லை. மணியன் தீவு கிராமத்தில் 234 மீனவர்களில், 3 பேருக்கு 20,000 ரூபாயும்; 41 பேருக்கு 10,000 ரூபாயும் வழங்கிய அதிகாரிகள், மீதி மீனவர்கள் கட்டுமரங்களைப் பதிவு செய்யவில்லை என்ற காரணத்தைக் கூறி, நிவாரணம் வழங்க மறுத்துவிட்டார்கள்.

மீனவர்களைப் பொருத்தவரை எல்லா மீனவர்களுக்கும் உரிய நிவாரணம் கிடைக்கும் வரை யாரும் தொழிலுக்குப் போவதில்லை என்ற சமூக உணர்வோடு, அரசின் நியாயமான உதவியை எதிர்பார்த்து இருக்கிறார்கள். ஆனால், அரசோ அவர்கள் பயந்து கொண்டு கடலுக்குள் போகாமல் இருப்பதாகப் பொய்ப் பிரச்சாரத்தை நடத்துகிறது.

**ஆயிரக்கணக்கான மக்களையும், அவர்களது உடைமைகளையும் காக்கத் தவறிய *குற்றத்திற்கான தண்டனை* என்ற விதத்தில்தான், நிவாரண உதவிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.**

**தற்காலிக வீடா, மாட்டுக் கொட்டகையா?**

சுனாமியால் வீட்டை இழந்து விட்டு நிற்கும் மீனவர்கள், தங்களுக்கு ஜெயா அரசு ''பையனூர் பங்களா'' மாதிரி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. மாறாக, குடிசையாக இருந்தாலும், வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள்.

www.padippakam.com

ஆனால், அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அரைகுறையாக கூரைக் கொட்டகைகளையும், தகரக் கொட்டகைகளையும் போட்டுக் கொடுத்துவிட்டு, மீனவர்கள் அனைவருக்கும் தற்காலிக வீடு கொடுத்து விட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. 2000 ரூபாய் செலவு பிடிக்கும் கூரைக் கொட்டகைகளை 5000 ரூபாய் செலவு செய்து கட்டியிருப்பதாக விளம்பரம் செய்கிறார்கள்.

மேலும், சுனாமி பீதியைப் பயன்படுத்திக் கொண்டு, கடற்கரையில் இருந்து மீனவர்களை அப்புறப்படுத்தவும் தமிழக அரசு முயலுகிறது. இதன் முதல் கட்டமாக, கடற்கரையில் இருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் மீனவர்கள் வசிக்கக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை மீறி வசிப்பவர்களுக்கு தமிழக அரசின் சலுகைகள் எதுவும் கிடைக்காது என அதிகாரிகள் மிரட்டுவதாக புதுக்குப்பம் பகுதி மீனவர்கள் கூறுகிறார்கள்.

இப்படி கெடுபிடி செய்து மீனவர்களைக் கடற்கரையில் இருந்து அப்புறப்படுத்த முயலும் தமிழக அரசு, கடற்கரையைச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருக்கும் இறால் பண்ணைகள், உல்லாச விடுதிகள் மீதும் பாயுமா?

மீனவர்களுக்கு நிரந்தர வீடு கட்டுவதற்காக தமிழக அரசு 3 செண்ட் நிலம் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. நிரந்தர குடியிருப்புகள் கடற்கரையில் 500 மீட்டர் தாண்டி அமையும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை பகுதி மீனவர்களுக்கு, கடலுக்கு சம்மந்தமில்லாத ஒக்கியம், துரைப்பாக்கம், சாத்தான்காடு பகுதிகளில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இது, கடற்கரையை அழகுபடுத்த மீனவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்ற உலக வங்கியின் உத்தரவை நிறைவேற்றும் சதியாகும்.

### உலக வங்கிக் கடன் - இன்னொரு சுனாமி

சுனாமி அலைகளில் இருந்து மீனவர்களைக் காப்பாற்ற கிழக்குக் கடற்கரை நெடுகிலும் சுவர் கட்டும் திட்டமொன்றை ஜெயா அறிவித்திருக்கிறார். இத்திட்டத்திற்குக் கடன் வழங்கும் நோக்கில் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் அதிகாரிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்துச் சென்றிருக்கிறார்கள்.

5,000 கோடி ரூபாய் பெறுமான இந்தக் கோமாளித் திட்டம் நிறைவேறினால், ஓட்டுக் கட்சிகளைச் சேர்ந்த காண்டிராக்டர்களும், எல் அண்ட் டி போன்ற கட்டுமான நிறுவனங்களும் தான் பலனடையுமே தவிர, மீனவர்கள் கட்டுமரத்தையும், வலையையும் எடுத்துக் கொண்டு கடலுக்குள் இறங்குவதே பெரும்பாடாகி விடும்.

''மீனவர்கள் கடற்கரையில் வலைகளை உலர்த்தக் கூடாது; கட்டுமரங்களை நிறுத்தக் கூடாது; கடலுக்கு அருகில் குடிசை போட்டு வாழக் கூடாது; மீனவர்கள் பயன்படுத்தும் டீசலுக்கு மானியம் தரக்கூடாது; கிழக்கு கடற்கரையில் இறால் பண்ணைகள் அமைக்க வேண்டும்; சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக விடுதிகள் கட்ட வேண்டும்'' - என ஏற்கெனவே கொடுத்த கடனுக்குப் பல உத்திரவுகளைப் போட்டுள்ள உலக வங்கி, ஐயாயிரம் கோடி ரூபாய் கடனைச் சும்மா தந்து விடுமா?

தமிழகத்திற்கு வந்துபோன உலக வங்கி அதிகாரிகள், ''மீன்பிடி தொழிலை நவீனப்படுத்த வேண்டும்'' என ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள் (தி ஹிந்து, 24.1.05). இதன் பொருள் ஏழை மீனவனுக்கு நவீன படகுகளையும், வலைகளையும், மீன் பிடிக்கும் உத்திகளையும் தர வேண்டும் என்பதல்ல. மாறாக, அந்நிய மீன்பிடிக் கப்பல்கள் கிழக்குக் கடற்கரையில் தங்கு தடையின்றி மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்பதுதான். இப்படியொரு நிலை வந்தால் தமிழகத்தைச் சேர்ந்த பாரம்பரியமிக்க மீனவர்களைக் கடற்கரையில் இருந்து மட்டுமல்ல, மீன் பிடிக்கும் தொழிலில் இருந்தே அப்புறப்படுத்தப்படுவார்கள்.



தேவனாம்பட்டினக் கிராமத்தில் படகு இன்ஜின்களைப் பழுது பார்ப்பதாக இந்திய இராணுவம் நடத்திய நாடகம்.

### தனியார்மயமாகும் நிவாரணம்

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்பு பற்றி கணக்கெடுப்பது, சுகாதார - மருத்துவ வசதிகளைச் செய்து தருவது, உணவு, உடைகள் போன்ற நிவாரண உதவிகளைச் செய்வது என அரசு அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும் இப்பொழுது அரசு சாரா நிறுவனங்கள் தான் செய்கின்றன. அந்த அமைப்புகளின் 'சேவை'யை எப்படி பார்ப்பது?

தேவனாம்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த கனகராஜ் என்ற மீனவர், ''விவேக் ஓபராய் செய்வார் எனக் கூறி, அரசாங்கம் தப்பித்துக் கொண்டது'' என்றார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பொறுப்பில் இருந்து அரசு கழட்டிக் கொண்டதை, இதைவிட ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட முடியாது.

தனியார்மயத்தின் பின் கல்வி, மருத்துவம் போன்ற சேவைகளை மக்களுக்கு வழங்குவதை அரசு தனியாரிடம் ஒப்படைத்து விட்டதைப் போல,



படிப்பகம்

இப்பொழுது நிவாரண உதவிகள் வழங்கும் பொறுப்பையும் அரசு தனியார் வசம் ஒப்படைத்து விட்டது. பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி சேவைத் துறைகள் தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டதைப் போல, ''இந்தப் பேரிழப்பை அரசு தனியாகச் சமாளிக்க முடியாது'' எனக் கூறி, நிவாரணம் தனியார்மயமாவது நியாயப்படுத்தப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்கள் அனைத்திலும் மீனவர் பஞ்சாயத்துகள் உள்ளன. அப்பஞ்சாயத்துகளைக் கூட்டி வைத்து அரசு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதில்லை. மாறாக, அவர்களுக்குச் சம்பந்தமில்லாத, திடீரென அவர்கள் கிராமத்தில் வந்து குதித்திருக்கும் அரசு சாரா நிறுவனங்களுடன்தான் பேச்சு வார்த்தை நடத்துகிறது. இதற்காகவே பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அரசு சாரா நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் தொண்டு நிறுவனங்களின் ஏஜெண்டுகளாக நியமிக்கப்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு கொடுப்பது, மருத்துவ வசதிகள் கொடுப்பது என சில்லறை வேலைகளைச் செய்து கொண்டிருந்த அரசு சாரா நிறுவனங்கள், இப்பொழுது வீடு கட்டி கொடுப்பது, படகு, வலைகள் வாங்கிக் கொடுப்பது என அரசுக்கு இணையான நிறுவனமாக மாறிவிட்டன.

மனிதாபிமான அடிப்படையில் பொது மக்கள் நிவாரணத்தில் பங்கு கொள்வதையும், அரசு சாரா நிறுவனங்கள் செய்யும் 'சேவையையும்' ஒன்றாகப் பார்க்க முடியாது. தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவப் பெண், ''விவேக் ஓபராய் எங்கள் நாட்டை அடமானம் வைத்து டாலர் வாங்குகிறார். எவ்வளவு பணம் வாங்குகிறார்கள்? என்ன செலவு? யாருக்குத் தெரியும்?'' என்றார். அவரின் இந்த சாட்டையடி, விவேக் ஓபராய்க்கு மட்டுமல்ல, எல்லா அரசு சாரா அமைப்புகளுக்கும் பொருந்தும். மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட, ''பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களைக் காட்டி, நாற்பது கோடி கொடு, நூறு கோடி கொடு என இண்டர்நெட் மூலம் வசூல் வேட்டை நடத்தத் தொடங்கிவிட்டதை''ச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரசு சாரா அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களைக் காட்டி நடத்தும் இந்த வியாபாரம், ''சேவை''யின் மூலம் மூடி மறைக்கப்படுகிறது. இந்தச் சேவையின் மூலமே நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு அரசை நம்பியிருக்கத் தேவையில்லை என்ற தனியார்மயத்துக்கு ஆதரவான விஷக் கருத்தும் மக்களின் மூளையில் திணிக்கப்படுகிறது.



தேவனாம்பட்டினம் கிராமத்தில் மீனவர்கள் மீண்டும் 'தொழிலுக்குப் போவதை'க் கொடி அசைத்துத் துவக்கி வைக்கும் ஆளுநர் பர்னாலா: அதிகார வர்க்கத்தின் மோசடி பிரச்சாரம்.

> 2 இலட்சம் மீனவர்கள் தங்களின் வாழ்க்கையைத் தியாகம் செய்து, 100 கோடி இந்திய மக்களைக் காப்பாற்றி இருக்கிறார்கள். எனவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விவசாயிகளின் மறுவாழ்விற்கான முழு பொறுப்பையும் அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**மானிய உதவி: மிகப் பெரும் மோசடி**

சுனாமி பேரலை தாக்கிய இரண்டொரு நாளிலேயே, ''மீனவர்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை'' என ஜெயா தடபுடலாக அறிக்கை கொடுத்தார். அவருக்குப் போட்டியாக மைய அரசும் ''மீனவர்களுக்கு உதவ நிதி ஒரு பிரச்சினையே யில்லை'' என வாக்குறுதிகளை அள்ளி வீசி வந்தது. மைய அரசும், மாநில அரசும் இணைந்து, மீனவர்களுக்குத் தேவையான அனைத்'தை'யும் இலவசமாகவே செய்து கொடுத்து விடுவார்கள் என்பது போன்ற தோற்றம் கூட பத்திரிகைகள் மூலம் உருவாக்கப்பட்டது. ஆனால், இப்பொழுதோ, தமிழக அரசும், மைய அரசும் தனித்தனியாக அறிவித்திருக்கும் உதவி, மானியம், கடன் திட்டங்கள் எல்லாம், எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பதைத்தான் நோக்கமாகக் கொண்டுள்ளன.

மீனவர்களின் கணக்குப்படி ''புதிதாகக் கட்டுமரம் ஒன்றைச் செய்ய 40,000 ரூபாய் வரை செலவாகும். ஒரு கட்டுமர மீனவன் மீன் பிடிக்க கடலுக்குள் இறங்க வேண்டும் என்றால், அவரிடம் குறைந்தது மூன்று வலைகள் இருக்க வேண்டும். இந்த மூன்று வலைகளை வாங்கக் குறைந்தது 60,000 ரூபாய் வரை செலவாகும். ஆக, ஒரு கட்டுமர மீனவனுக்குக் குறைந்தபட்சம் ஒரு இலட்ச ரூபாய் மூலதனமாகக் கிடைத்தால்தான், தொழிலைத் தொடங்க முடியும்.''

ஆனால், தமிழக அரசோ, புதிதாகக் கட்டுமரமும், வலையும் வாங்குவதற்கு 32,000 ரூபாய்தான் ஆகும் என ஒரு பொய்க் கணக்கைக் கூறியிருப்பதோடு, அந்தப் பணம் முழுவதையும் மானியமாக வழங்குவதாகத் தம்பட்டம் அடித்திருக்கிறது. அதாவது, ஒரு கட்டுமர மீனவன் கடன் எதுவும் வாங்காமல், தமிழக அரசு தரும் மானியத்தைக் கொண்டே தொழிலுக்குப் போய் விடலாம் என்ற கருத்தை உருவாக்கு

www.padippakam.com

கிறார்கள். தமிழக அரசின் இந்த உதவி ஒரு மோசடி என்பது மீனவனுக்கு மட்டும்தான் தெரியும். மீனவர் அல்லாத மக்களோ, ஜெயாவின் தாராள மனத்தைப் பார்த்து மயங்கிப் போய் விடுவார்கள்.

ஒரு ஃபைபர் படகின் விலை குறைந்தபட்சம் 90,000 ரூபாய்; அதற்குப் பொருத்தப்படும் இன்ஜினின் விலை குறைந்தபட்சம் 40,000 ரூபாய். ஃபைபர் படகுக்குத் தேவைப்படும் வலைகளையும் கணக்கில் சேர்த்தால், குறைந்தது இரண்டு லட்ச ரூபாய் மூலதனம் தேவைப்படும். ஆனால், ஃபைபர் படகுக்குத் தமிழக அரசு தரவுள்ள அதிகபட்ச மானியம் 52,500 ரூபாய்தான். 12 லிருந்து 18 இலட்ச ரூபாய் பெறுமான விசைப் படகுகளுக்கு அதிகபட்ச மானியம் ஐந்து இலட்ச ரூபாய்.

மீனவர்கள் பயன்படுத்தும் பல வலைகளுள் ஒன்றான கில்லட் வலையின் விலை ஒரு இலட்ச ரூபாய்; சிலோன் வலையின் விலை 70 ஆயிரம் ரூபாய். இந்தக் கணக்கில் இருந்து பார்த்தால், அரசு அறிவித்துள்ள மானியம், மீனவர்களுக்கு வலை வாங்கக்கூடப் பத்தாது என்பது தான் உண்மை.



சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி அதிகாரிகளைச் சந்திக்கும் ஜெயா.

**வரி பாக்கியை வசூலித்து நிவாரணத்தை வழங்கு!**

இனி அரசை நம்பிப் பயனில்லை, மீண்டும் தொழிலைத் தொடங்க கந்து வட்டிக்குக் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமைக்கு மீனவர்கள் தள்ளப்பட்டு விட்டனர். கந்துவட்டிக்காரனிடம் ஏன் போக வேண்டும்? மீனவர்களின் மறுவாழ்வுக்குத்தான் குறைந்த வட்டியில் கடன் தர மைய அரசு முன் வந்திருக்கிறதே என தி.மு.க. வகையறா 'மீனவ நண்பர்கள்' கூறலாம். மீனவர்களின் மறு வாழ்வுக்குத் தேவைப்படும் மூலதனத்தை, முற்றிலும் மானியமாக, நட்ட ஈடாக ஏன் தரக்கூடாது என்பதுதான் நமது கேள்வி.

சுனாமி தாக்குதலினால் தமிழகத்தின் மீன்பிடி தொழிலே நிலைகுலைந்து போய்விட்டது. ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் மீனவர்களின் வாழ்க்கை சிதறடிக்கப்பட்டு விட்டது. சுபாஷ் என்ற மீனவ இளைஞனின் வார்த்தைகளில் சொன்னால், மீனவர்களின் வாழ்க்கை இருபத்தைந்து ஆண்டு காலம் பின்னோக்கிப் போய்விட்டது.

அரசு, சுனாமி தாக்குதலுக்கு முன்பு வரை, மீனவர்களுக்கு செய்த பெரும் உதவி வானிலை அறிக்கையைத் தவிர வேறெதுவும் கிடையாது. கந்துவட்டிக் காரர்கள், பெரிய மீன் வியாபாரிகள் என்ற ஒட்டுண்ணிக் கும்பலிடம் கடன் பட்டுதான், மீனவர்கள் தொழிலை நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் கூட உதவி செய்யாமல், கடனுக்கு அலைய வைப்பது எந்த விதத்தில் நியாயமாகும்?

பணம் கொழுத்துப் போன பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்க வந்தால், அந்நிறுவனங்களுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. என்ரான் என்ற அமெரிக்க நிறுவனம் இந்தியாவில் போட்ட மூலதனத்திற்கு 16 சதவீத இலாபம் கிடைக்கவில்லையென்றால்,அந்த இலாபத்தை மைய அரசு தருவதாக ஏற்றுக் கொண்டது. வெள்ளைக்கார முதலாளிகளுக்கு இப்படித் தயங்காமல் பல ஆயிரம் கோடி ரூபாயை அரசு கஜானாவில் இருந்து வாரியிறைத்தவர்கள், உள்நாட்டு மீனவர்களுக்குத் தேவைப்படும் மூலதனத்தைக் கடனாகத்தான் கொடுப்போம் என்றால், இதைவிட ஓர வஞ்சனை, துரோகம் வேறு எதுவும் இருக்க முடியுமா?

மைய அரசின் கணக்கின்படி, தமிழகம், ஆந்திரா, பாண்டி, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்குத் தேவைப்படும் நிதி ஏழாயிரம் கோடி ரூபாய்தான். இவ்வளவு 'பெரிய' தொகையை மானியமாகக் கொடுக்க முடியுமா என மெத்தபடித்த மேதாவிகள் கேட்டால், அவர்களின் முகத்தில் அறைவது போல நம்மால் பதில் சொல்ல முடியும்.

- தரகு முதலாளிகள், மொத்த வியாபாரிகள், பங்குச் சந்தை சூதாடிகள், பன்னாட்டு நிறுவனங்கள் ஆகிய பண முதலைகள் மைய அரசிற்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி 1 இலட்சம் கோடி ரூபாய்.
- அரசு வங்கிகளில் வாங்கிய கடனைக் கட்டாமல், பெரும் முதலாளிகள் ஏப்பம் விட்டுள்ள தொகை ஒரு இலட்சம் கோடி ரூபாய்.

- இதில் ஒரு ஐந்து சதவீதத்தை வசூலித்தாலே, மீனவர்களுக்குத் தேவைப்படும் படகுகள், வலைகள், குடியிருப்புகள், நிவாரண உதவிகள் அனைத்தையும் இலவசமாகவே செய்து தந்து விடலாம்.

டிசம்பர் 26 அன்று கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பம் நிலப்பகுதியில் ஏற்பட்டிருந்தால், இந்தியாவே அழிந்து போயிருக்கும் என நிபுணர்கள் சொல்கிறார்கள். 2 இலட்சம் மீனவர்கள் தங்களின் வாழ்க்கையைத் தியாகம் செய்து, 100 கோடி இந்திய மக்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். எனவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விவசாயிகளின் மறுவாழ்விற்கான முழு பொறுப்பையும் அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த உதவியைச் செய்யுமாறு அரசை நிர்பந்தித்து மற்றவர்கள் போராட வேண்டும். அதுதான் அந்தத் தியாகிகளுக்கு நாம் செய்யும் கைமாறாகும்!

● பிரகாஷ்

தகவல் உதவி: சேகர், ஆசாத், ஷகீல் அகமது, தசரதன், தீனதயாளன்.



படிப்பகம்

www.padippakam.com

# அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!

## பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் புரட்சிகர அமைப்புகள்

**சு**னாமியைப் போன்றதொரு பேரழிவு மக்களைத் தாக்கும்போது நிவாரணம், மீட்புப் பணிகளில் ஈடுபடுவது ஒரு அரசியல் இயக்கத்தின் கடமையாக மட்டுமின்றி, ஒவ்வொரு மனிதனின் தார்மீகப் பொறுப்பாகவுமிருக்கிறது.

டிசம்பர் - 26-ம் தேதி காலை சுனாமி தமிழகத்தைத் தாக்கியபோது அந்தத் தாக்குதலின் கோரத்தைப் பற்றியோ, உயிரிழப்பின் அளவைப் பற்றியோ யாரும் உடனே புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், செய்தியறிந்தவுடனே ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. அமைப்புகளைச் சேர்ந்த எமது தோழர்களும், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்களும் கடலோரப் பகுதிகளை நோக்கி விரைந்தனர். 'நிவாரணப் பணிகள்' என்றழைக்கப்படும் எமது கடமை அந்தக் கணமே தொடங்கியது.

கடலுக்குச் சென்று உடல் சோர்ந்து கரை திரும்பிய மீனவர்கள், கடற்கரையோரம் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், மீன் வாங்கி விற்பதற்காகக் கரையில் குழுமியிருந்த மீனவப் பெண்கள், சவுக்குத் தோப்பில் விறகு சேகரித்துக் கொண்டிருந்த பெண்கள், வலையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த மீனவர்கள்... இது எல்லா கடலோர மீனவக் கிராமங்களிலும் காலையில் காணும் காட்சி.

அன்று காலை கடலூரைத் தாக்கிய சுனாமி 50-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சிதைத்தது. உயிரிழந்தவர்கள், உயிர் பிழைக்கத் திக்குத் தெரியாமல் ஓடியவர்கள், கடலினுள் பாய்ந்து உயிர் காக்கப் போராடிய மீனவ வீரர்கள் என எல்லா இடங்களிலும் பதற்றம்.

அந்த நேரத்தில் அங்கிருந்த பு.மா.இ.மு. தோழர்கள் ஆற்றில் இழுத்துச் செல்லப்பட்ட ஒரு பெண்ணைக் காப்பாற்ற மீனவர்கள் துணையுடன் முயன்றனர். பேரலையொன்று அந்தப் பெண்ணைப் பறித்துச் சென்றது. தாழங்குடா பகுதியிலிருந்து தப்பி வந்த இருவர் உப்பலவாடி தரைப்பாலத்தில் அலையால் இழுத்துச் செல்லப்பட்டனர். அந்த இரண்டு உயிர்களைக் காப்பாற்றினார்கள் பு.மா.இ.மு. தோழர்கள். கரையில் நின்று கொண்டிருந்த போலீசும் தீயணைப்புப் படையும் ''ஒடுங்கய்யா, ஒடுங்கய்யா'' என்று காப்பாற்ற முனையும் மக்களையும் விரட்டிக் கொண்டிருந்தது.

சீர்காழி பகுதியைச் சேர்ந்த தோழர்கள் திருமுல்லைவாயில் கிராமத்தில் இறந்த உடல்களை மீட்டு அடக்கம் செய்தனர். கடலோரம் நெடுகிலும் 35 கி.மீ. நீளமுள்ள 15 கிராமங்களுக்கு தோழர்கள் உடனே ஒரு குழுவாகக் கிளம்பி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

திக்குத் திசை தெரியாமல் ஓடிவரும் மக்கள், மருத்துவமனையில் வந்து குவியும் உடல்கள், இவையெதையும் கண்டு கொள்ளாத அதிகார வர்க்கம்! தமிழகம் முழுவதும் இதுதான் நிலை.

அகதிகளாய் ஓடிவரும் மக்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்வது, மருத்துவமனையில் உடல்களை அடையாளம் காணவும் உயிர்காக்கவும் உதவுவது, நிவாரணப் பொருட்கள் திரட்டுவது, அரசின் அலட்சியத்தை உடனே மக்கள் மத்தியில்

சென்னை - பட்டினப்பாக்கம் (மேலே) மற்றும் கடலூரில் அமைக்கப்பட்ட நிவாரண முகாம்கள்.






www.padippakam.com

அம்பலப்படுத்துவது என்ற பணிகள் தோழர்கள் முன் நின்றன.

தஞ்சை மாவட்டத் தோழர்கள் நாகப்பட்டினத்திற்கும், சென்னைப் பகுதித் தோழர்கள் பட்டினப்பாக்கம் கடற்கரைக்கும் காலை 11 மணிக்கே சென்று சேர்ந்து விட்டனர். பல கிலோமீட்டர் தூரம் கால்நடையாய் ஓடிவந்த மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர், உணவு, குழந்தைகளுக்குப் பால், அனைத்துக்கும் மேலாக அவர்கள் தங்குவதற்கு ஒரு இடம் - இவை மக்களின் அவசரத் தேவைகளாயிருந்தன.

இவற்றை மிக எளிதாக வழங்க வல்ல அரசோ மாயமாய் மறைந்து விட்டிருந்தது. உடல்களை அப்புறப்படுத்தும் பணியைத் தாங்களே செய்த மக்கள் ஆம்புலன்ஸை மட்டும் கேட்டபோது ''டீசல் இல்லை'' என்றார்கள் குமரி மாவட்ட மருத்துவமனை அதிகாரிகள். போலீசும் தீயணைப்புத் துறையும் மாலை 4.30 மணிக்கு வந்து கடலிலிருந்து 2 கி.மீ தள்ளி 'பாதுகாப்புக்கு' நின்றன.

மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய எல்லா இடங்களிலும் மக்களே முன் நின்றனர். பால், பிஸ்கட், ரொட்டி முதலானவற்றை வியாபாரிகளிடம் திரட்டி விநியோகித்தார்கள் இளைஞர்கள். ஆனால் தங்குமிடம்? எந்த அரசுப் பள்ளியோ, தனியார் பள்ளியோ, திருமண மண்டபமோ தானே திறக்கவில்லை.

பட்டினப்பாக்கத்தில் மாநகராட்சிப் பள்ளி, சார்பதிவாளர் அலுவலகம், ஓடிசி கேரள மருத்துவமனை ஆகியவற்றின் நிர்வாகத்திடம் பேசித் திறந்து விட வைத்தார்கள் சென்னைத் தோழர்கள். கேட்டுப் பயனில்லை எனப் பூட்டை உடைத்து இரண்டு திருமண மண்டபங்களில் 3000 பேரைத் தங்க வைத்தனர் கடலூர் தோழர்கள். சீர்காழி ராயல் திருமண மண்டபத்தின் பூட்டை உடைத்துத் திறந்த சேதியைச் சொல்லியும் செய்தி வெளியிடவில்லை தினமலரும், தினத்தந்தியும். திருவாரூர் கோயிலில் தஞ்சம் புகுந்த மக்களை வெளியேற்ற முனைந்த அர்ச்சகரையும் நிர்வாகியையும் எச்சரித்து மக்களை அங்கேயே தங்க வைத்தனர் பு.மா.இ.மு. தோழர்கள்.

இத்தனைக்குப் பிறகும் நிவாரண முகாம் எதையும் அரசு துவக்கவில்லை. நிவாரண முகாம்களை உடனே அமைப்பது என முடிவு செய்தனர் தோழர்கள். கடலூர் மஞ்சக்குப்பத்திலும், திருவாரூர் அழகிரி காலனியிலும், நாகை பேருந்து நிலையம் அருகிலும், சென்னை பட்டினப்பாக்கத்திலும், சீர்காழியிலும் நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டன. நிவாரண முகாம் இயங்குவது குறித்து விளம்பரங்கள் தொலைபேசி எண்ணுடன் அச்சிடப்பட்டு பரவலாக ஒட்டப்பட்டன.

இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வது, அவர்களது புகைப்படங்களைப்

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் தோழர்கள்.



## அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விவசாயிகள், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் கடலோர மக்களின்**

# வாழ்வுரிமைக்கான மாநாடு

பேரணி - பொதுக்கூட்டம் - புரட்சிகர கலைநிகழ்ச்சிகள்

**5.2.2005**
**கலைவாணர் கலையரங்கம், நாகர்கோவில்.**

**6.2.2005**
**கங்கா - காவேரி திருமண மண்டபம், திருவொற்றியூர், சென்னை.**

**7.2.2005**
**சுப்பராயலு திருமண மண்டபம், கடலூர்**

**12.2.2005**
**சிவசக்தி திருமண மண்டபம், கோட்டைவாசல், நாகை.**

*உரையாற்றுவோர்:*

**சுனாமியில் வாழ்விழந்த மீனவர்கள், விவசாயிகள், கடலோர மக்கள், உயிர் காத்த வீரர்கள், மீனவ மக்களின் பிரதிநிதிகள், அறிவியலாளர்கள், பேராசிரியர்கள்.**

**ம.க.இ.க.-பு.மா.இ.மு.-பு.ஜ.தொ.மு.-வி.வி.மு.**

www.padippakam.com

பார்வைக்கு வைப்பது, பல்வேறு பள்ளிகளிலும் மண்டபங்க ளிலும் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களின் தேவைகள் குறித்த விவரங்களைத் திரட்டித் தொகுப்பது போன்ற பணி கள் முகாம்களில் ஒருங்கிணைக்கப்பட்டன. புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் நண்பர்களும் தமது குடும்பத்துடன் நிவாரண முகாம்களுக்குச் சென்று பாதிக்கப் பட்டோருக்கு ஆறுதல் கூறி துயரத்தை பகிர்ந்து கொண்டனர்.

தமிழகமெங்கிலும் நிவாரணப் பொருட்களைத் திரட்டிய தோழர்கள் அவற்றை முகாம்களுக்கு அனுப்பி வைத்தனர். இவையன்றி பல்வேறு ஊர்களிலிருந்தும், வெளி மாநிலங்க ளிலிருந்தும் நிவாரணப் பொருட்களைக் கொண்டு வந்தவர் கள் பலர் யாருக்குத் தருவது, எப்படி விநியோகிப்பது என்று புரியாமல் தவித்தனர். ''இதெல்லாம் எங்களுக்குத் தெரி யாது. நீங்களே பாத்து கொடுத்துக்குங்க'' என்பதே அரசு அதி காரிகள் மற்றும் போலீசாரின் பதிலாக இருந்தது.

அரசு செய்ய மறுத்த பணியை எமது முகாம்கள் செய்தன. நாகை, திருவாரூர்ப் பகுதிகளில் மக்கள் தங்க வைக்கப்பட்டி ருந்த ஒவ்வொரு மண்டபத்திலும், பள்ளியிலும் இரண்டு தோழர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மக்களின் தேவைக ளைப் பட்டியலெடுத்தனர். முகாம்களில் திரட்டப்பட்ட பொருள் பிரித்து அனுப்பப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் 32 முகாம்களில் இருந்த 50,000 மக்க ளுக்கு நிவாரணப் பொருட்கள் பிரித்து அனுப்பப்பட்டன. சென்னையில் பாதிக் கப்பட்ட மக்களைப் பட்டியலெடுத்து, அவர்களுக்கு டோக்கன் வழங்கி, அதன டிப்படையில் அவர்களுக்குப் பொருட் கள் விநியோகிக்கப்பட்டன. சீர்காழி வட் டாரத்தில் பாதிக்கப்பட்ட மடவாமேடு, கொட்டாயமேடு, சின்னக் கொட்டாய மேடு, தொடுவாய், திருமுல்லைவாயில், கீழ மூவர்க்கரை, வானகிரி ஆகிய மீன வக் கிராமங்களுக்கு நிவாரணப் பொருட் கள் விநியோகிக்கப்பட்டன.

வெளியூர்களிலிருந்து நிவாரணப் பொருட்களைக் கொணர்ந்த பலர் ''யார் மூலம் விநியோகித்தால் உரியவர்களுக் குச் சரியாகப் போய்ச் சேரும்'' என்பதை மீனவர்களிடமே விசாரித்தனர். இப்படிப் பலரை மக்களே நமது முகாமுக்கு அழைத்து வந்தனர். அவர்கள் முன்னி லையிலேயே பொருட்கள் பிரித்து விநி யோகிக்கப்பட்டன.

சென்னையில் நடிகர் நெப்போலியன் ரூ. 2 லட்சம் மதிப்புள்ள பொருட்களை நமது முகாம் மூலம் வழங்கினார். எல்.ஐ.சி., பெல், பாரத் எலக்ட்ரிகல்ஸ் நிறுவன ஊழியர்களது நிவாரணப் பொருட்களும், இன்னும் பல்வேறு பிரி வினர் கொணர்ந்த பொருட்களும் சென்னை முகாம் மூலம் விநியோகிக்கப் பட்டன. பெங்களூரிலிருந்து ஒரு தனி யார் நிறுவனம் தனது ஊழியர் மூலம் எமது அமைப்பை அறிந்து நிவாரணப் பொருட்களை ஒப்படைத்தது. வெளி மாநிலங்களிலிருந்து வந்த பலரும், சென் னையின் பல தனியார் நிறுவன ஊழியர்க ளும் பல லட்சம் மதிப்புள்ள பொருட் களை கடலூர் முகாம் மூலம் விநியோகித்தனர். சென்னை சித்த மருத்துவக் கல்லூரி, பெங்களூர் நிறுவனங்கள், திருச்சி யைச் சேர்ந்த இளைஞர்கள் போன்றோர் எமது நாகை, திரு வாரூர் முகாம்களில் பல லட்சம் மதிப்புள்ள பொருட்களை ஒப்படைத்தனர். இவையன்றி அமைப்பின் மூலம் தமிழக மெங்கும் திரட்டப்பட்ட துணிகள், பிஸ்கெட், குளுகோஸ், மருந்துப் பொருட்கள், புதிய போர்வைகள், கைலிகள், துண் டுகள், சமையல் பாத்திரங்கள், மளிகை, ஸ்டவ், பாய் போன்ற பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. விநியோகிக்கப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ஏறத் தாழ 50 லட்சம் ரூபாய்.

சுனாமி தாக்கி ஒரு வாரம் கடந்த பின்னரும் அரசு எந்தி ரம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை என்பதும் தொண் டுள்ளம் கொண்ட மக்களும் அமைப்புகளும்தான் நிவார ணப் பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதும் ஊடகங் கள் வாயிலாக நாறத் தொடங்கியவுடன், தனக்குக் 'கெட்ட பெயரை' ஏற்படுத்துவோரைத் தடுக்கத் தொடங்கியது அரசு. பல ஊர்களிலிருந்து உதவிப் பொருட்களைக் கொண்டு வந்த வர்களின் லாரிகளை அ.தி.மு.க. குண்டர்களும், போலீசும் நாகை, திருவாரூர் நகர எல்லையிலேயே மடக்கி கலெக்டர் ஆபீசுக்கும், போலீசு எஸ்.பி. ஆபீசுக்கும் கொண்டு சென்ற

**''புத்தாண்டு கொண்டாட வேண்டாம்! உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்! அவர்களுடைய வாழ்வுரிமைக்குப் போராடுவோம்!'' என்ற முழக்கங்களை முன்னிறுத்தி டிச.31 அன்று நள்ளிரவில் திருவாரூரிலும் (மேலே) சென்னையிலும் நடத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டங்கள்.**








படிப்பகம்

www.padippakam.com

னர். அங்கே அவை கெட்டு நாசமாகின.

எண்ணிப் பார்க்கவே முடியாத அளவுக்கு வக்கிரபுத்தி கொண்ட அதிகார வர்க்கத்தை எதிர்த்து நடத்த வேண்டியிருந்த போராட்டம் தான் சுனாமியை எதிர்த்த போராட்டத்தினும் கொடியதாக இருந்தது.

26-ம் தேதியன்று சீர்காழி மருத்துவமனையில் மருத்துவர்களுக்கு உதவியாகப் பணியாற்றிய பு.மா.இ.மு. தோழர்கள், மறுநாள் வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டபங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பக் கோரினர். ''அதைச் சொல்ல நீ யார்?'' என்பதே துணை தாசில்தார் வழங்கிய பதில்.



நிவாரணப் பணிகளை மெத்தனமாகச் செய்து அலட்சியப்படுத்தி வரும் அரசை எதிர்த்து சென்னையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

அதிகார வர்க்கத்திடம் நேரில் பேசி எதையும் சாதிக்க முடியாது; அதனை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதன் மூலம்தான் சிறிதளவாவது அசைய வைக்க முடியும் என்பதை உணர்ந்த தோழர்கள் மக்களுக்கான கோரிக்கைகளை சுவரொட்டிகளாகவும் துண்டறிக்கைகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கில் விநியோகித்தனர். கண்ணீர் அஞ்சலிச் சுவரொட்டிகளுக்கு நடுவே பளிச்செனத் தெரிந்த இந்தக் கனல் தெறிக்கும் சுவரொட்டிகள் மூலம் எமது கருத்துக்கள் மக்களுடைய கோரிக்கைகளாக வடிவம் பெற்றன. அரசியலற்ற மனிதாபிமானம் எனும் மாய்மாலத்திலிருந்து மக்களை விடுவித்தன.

''மக்களுக்குத் துணி வழங்குமாறு போத்தீஸ், நல்லி போன்ற துணி முதலாளிகளுக்கு அரசே உத்திரவிடு!'' என்ற எமது சுவரொட்டியை அவர்களது ஊழியர்களே வாங்கி கடையைச் சுற்றி ஒட்டினர். மறுநாள் போத்தீஸ் பெயர் போட்ட பையுடன் துணிகள் வந்தன. பெரும் உணவு விடுதிகளும் இவ்வாறே. நமக்கென்ன என்றிருந்த தனியார் பள்ளிகள், திருமண மண்டபங்கள், மருத்துவமனைகளின் கதவுகளும் இத்தகைய பிரச்சாரம் மற்றும் போராட்டத்திற்குப் பின்னர் தான் திறந்தன.

இருப்பினும், தனியார் முதலாளிகளின் இந்த 'இரக்கவுணர்ச்சி' நாலே நாளில் வற்றிக் காய்ந்துவிட்டது. ஜனவரி முதல் நாளன்றே திருவாரூர் மெரினா ஹாலின் உரிமையாளரும், அ.தி.மு.க. காலிகளும் சேர்ந்து கொண்டு மக்களை வெளியேற்றுவதற்காக உணவை நிறுத்தினர். ''உன் புருசன் தான் உனக்குச் சோறு போடலாம்; அடுத்தவன் எத்தனை நாளக்கி போடுவான்'' என்று வக்கிரமாகப் பேசினான் அடுத்தவன் சோத்திலேயே உடம்பு வளர்த்த ஒரு போலீசு அதிகாரி. தோழர்கள் தலைமையில் உடனே கெரோ போராட்டமும், சாலை மறியலும் தொடங்கியது. ''நீங்களாகப் போகும்வரை அனுப்ப மாட்டோம்'' என்ற ஆர்.டி.ஓ.வின் உறுதிமொழியுடன் போராட்டம் வென்றது.

நமது பிரச்சாரத்தின் விளைவாக அக்கரைப்பேட்டையில் அமைச்சர் பன்னீர் செல்வத்தை மக்கள் முற்றுகையிட்டனர். தெருவில் நிற்கும் மக்களுக்கு மண்டபத்தைத் திறந்துவிடாமல் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் இன்பத்தமிழன் தலைமையில் நடந்து கொண்டிருந்த ஆலோசனைக் கூட்டத்திற்குள்ளும் தோழர்களுடன் மக்கள் புகுந்தனர்.

குமரி மாவட்டத்தில், லட்சுமிபுரம் தனியார் கலை அறிவியல் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள் மண்டைக்காடு - புதூர் மீனவர்கள். அவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்த எமது தோழர்களை மறித்து ''இது இந்துக் கல்லூரி - இங்கே பிரசுரம் கொடுக்கக்கூடாது'' என்றார் ஆசிரியர் சங்க (மூட்டா) செயலர். ''நோட்டீசில் இருப்பது எங்களுக்குத்

## பிணந்தின்னிகள்

**அரசு** நிவாரணத்தை சர்வகட்சிக் குழு போட்டுப் பொறுக்கித் தின்னக் குரல் கொடுக்கும் எந்த ஓட்டுக்கட்சியும் நிவாரணப் பணியில் ஈடுபடவில்லை. மாரியம்மன் திருவிழாவுக்கு தண்ணீர் பந்தல் போடும் 'மார்க்சிஸ்டு'களும் இதற்கு விதிவிலக்கில்லை.

குறிப்பிடத்தக்க நிவாரணப் பணிகளைச் செய்தது தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகம் மட்டுமே. பல கிறித்தவ நிறுவனங்களும், மாணவர்களும், தொண்டு நிறுவனங்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தன.

ஊடகங்களால் பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.இன் நிவாரணப் பணி வருண முறைப்படி நடந்தேறியது. பிணங்களை அகற்றிப் புதைக்க தென்மாவட்ட அருந்ததியர்கள்; ஊரைக் கூட்டிச் சுத்தம் செய்ய ஒரிசா, ஆந்திராவிலிருந்து வந்திருந்த வனவாசி சேனா; பணம் கொடுக்க சேட்டுகள்; மோட்சதீபம் ஏற்றி பிரசங்கம் செய்ய பார்ப்பனர்கள்!

தலா 100 கோடி, 150 கோடி என்று நிவாரணம் அறிவித்த ரவிசங்கர்ஜி, அமிருதானந்த மாயி கும்பல்களும் தொண்டு நிறுவனச் சீமான்களும் ஏ.சி. பஸ்சில் வந்து இறங்கினர். சாமியார்கள் வழங்கிய நிவாரணம் 100 கோடியா, லட்சமா என்று யாரும் சரிபார்க்க முடியாது. ஆனால் ''சுனாமி ஒரு விபத்து; செத்தவர்கள் கடவுளிடம் சென்று விட்டனர். கோபம், வருத்தம் கூடாது'' என்ற அவர்களது பிரச்சாரம் அரசுக்கு பல்லாயிரம் கோடி மதிப்புள்ளது.

மனிதாபிமானம், கண்ணீர் என்ற மாய்மாலங்களைக் கிழித்துப் போராட அறைகூவிய காரணத்தால் எமது நிவாரணப் பணிகள் செய்தி ஊடகங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டன. பி.பி.சி., ஏ.என்.ஐ., தூர்தர்சன், தினமணி தவிர வேறு எந்த ஊடகமும் எடுத்த புகைப்படங்களையோ, வீடியோ காட்சிகளையோ வெளியிடவில்லை. சினிமாக் கதாநாயகன் விவேக் ஒபராயை சுனாமியின் நாயகனாகச் சித்தரிப்பதற்கே அவை அரும் பாடுபட்டன. தேவனாம்பட்டினத்தில இருந்து ஒபராய் துரத்தப்பட்டதைப் போலவே, 'பிணந்தின்னிகளான' மீடியாக்களும் விரைவில் துரத்தப்படுவார்கள்.





**திருவாரூரில் நிவாரண முகாமில் இருந்து மக்களை வெளியேற்ற முயன்ற போலீசு அதிகாரிகளையும், அ.தி.மு.க. காலிகளையும் கண்டித்து நடத்தப்பட்ட சாலை மறியல் (மேலே); ஓசூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.**

தேவையான விசயம். இங்கே கொடுக்காமல் எங்கே கொடுப்பார்கள்'' என்று பதிலடி தந்தனர் மக்கள். உடனே கல்லூரி வளாகத்திலேயே பொதுக்கூட்டம் துவங்கியது. மறுநாள், தோழர்களைப் பிடித்துச் சென்று போலீசில் ஒப்படைப்பதாக கல்லூரி முதல்வர் கூறியதும் முதல்வர் அலுவலகத்திற்குள் திமுதிமுவெனப் புகுந்த மக்கள் ''எங்க உசிரே போனாலும் இந்தப் புள்ளைகளைக் கொண்டு போக விடமாட்டோம்'' என்று மறித்தனர்.

குளச்சல் அருகே குறும்பனை என்ற மீனவக் கிராமத்திற்குப் பார்வையிட வந்த மாவட்ட நீதிபதியையும் அதிகாரிகளையும் தோழர்கள் தலைமையில் மக்கள் முற்றுகையிட்டனர். ''வெளியூர் ஆட்களுக்கு இங்கென்ன வேலை'' என்று கேள்வி எழுப்பிய உள்ளூர் கவுன்சிலரை போராட்டக் களத்திலிருந்து வெளியேற்றினார்கள் மக்கள்.

டிசம்பர் 31-ஆம் தேதி இரவு 12 மணிக்கு, ''புத்தாண்டு கொண்டாட வேண்டாம்! உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்! அவர்களுடைய வாழ்வுரிமைக்குப் போராடுவோம்'' என்று எல்லா முகாம்களிலும் இரங்கல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடலூரில் திரண்டிருந்த 600 மீனவர்களிடையே தோழர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே ''அனுமதி வாங்காமல் எப்படிக் கூட்டம் நடத்தலாம்'' என்று கூட்டத்தைத் தடுக்க முயன்றார் டி.எஸ்.பி. கூடியிருந்த மக்களோ ''தோழர்களே, நீங்க பேசுங்க. போலீச நாங்க பாத்துக்குறோம். எங்கள வேணும்னா கைது பண்ணட்டும்'' என்று குரல் கொடுத்தார்கள். பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்கள் மட்டுமின்றி நாங்கள் இயங்கிவரும் பிற மாவட்டப் பகுதிகளிலும் புரட்சிகர அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களையும், தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தின.

உடைமைகளையும் சுற்றத்தையும் இழந்து எதிர்காலமே இருண்டகாலமாகி அச்சுறுத்திக் கொண்டிருந்த நிலையிலும் மக்கள் வெளிப்படுத்திய போர்க்குணமும், தோழர்கள் மீது அவர்கள் காட்டி அன்பும் நெகிழச் செய்பவையாக இருந்தன.

நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு தோழர் தொளதொளப்பான பழைய சட்டை அணிந்திருப்பதைக் காணப் பொறுக்காமல், தனக்கு நிவாரணமாகக் கிடைத்த நல்ல சட்டையைக் கொடுத்து போடச் சொல்லி வற்புறுத்திய மீனவப் பெண்; நாகையில் தங்க இடமும் உணவும் தந்து ஒரே வாரத்தில் தோழராக மாறி விட்ட கேப்ரியல்; பாலக்கோட்டிலிருந்து வந்து நிவாரணப் பொருட்களைத் தந்து விட்டு, திரும்பச் செல்ல பேருந்து செலவு போக கையில் இருந்த 170 ரூபாயையையும் ஒப்படைத்து விட்டுப் போன இளைஞர்கள்; திரும்புகிறோம் என்று அறிந்ததும் நிவாரணப் பணியில் ஈடுபட்ட தோழர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அழைத்து தங்கள் கையால் சோறாக்கிப் போட்ட அக்கரைப் பேட்டை, கீச்சாங்குப்பம் மக்கள்...

தோழர்கள் நிவாரணப் பணி முடிந்து திரும்பிவிட்டனர். பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் நிரந்தர மறுவாழ்வுக்கான போராட்டப் பணியைத் தொடங்கிவிட்டனர்.

**ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. - புமா.இ.மு. - வி.வி.மு., தமிழ்நாடு**

**அட்டையில்....**

கொம்புகளை நட்டு
கிழிந்த புடவையைக் கட்டி
கொட்டகை போட்டுக் கொண்டு
நாகப்பட்டினத்தில் நிவாரண உதவி
ஏதுமின்றித் தவிக்கும்
குடும்பத்தின் அவலம்.

*படம்: சேகர்*

www.padippakam.com

# தாழ்த்தப்பட்ட ஏழையின் பூர்வீக நிலம் அபகரிப்பு! சிவகங்கை வலது கம்யூனிஸ்ட் கட்சியின் இழிசெயல்!

# நிலத்தை மீட்டெடுக்க வி.வி.மு. ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் அருகிலுள்ளது அல்லிவயல் கிராமம். இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வீ.செல்லக்கண்ணு என்பவருக்கு சர்வே எண் 43/1-இல் ஒரு ஏக்கர் 97 சென்ட் புஞ்சை நிலம் உள்ளது. இந்நிலம் இவருக்கு அரசால் வழங்கப்பட்டதோ அல்லது எவரும் இனாமாக வழங்கியதோ அல்ல. தனது தாய்வழிப் பாட்டி காலத்திலிருந்தே பக்கா பட்டா நிலமாக உள்ள இந்த நிலத்தை அவர் சட்டப்படி அனுபோகம் செய்து வருகிறார். இவர் நீண்டகாலமாக செங்கொடி இயக்கத்தில் பணியாற்றி வருபவர்.

அரசின் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் (UDRS) அவருடைய 60 சென்ட் நிலம் மட்டும் தவறுதலான முறையில் உட்பிரிவு செய்யப்பட்டு, அல்லி வயலைச் சேர்ந்த சம்பந்தமில்லாத மூன்று நபர்களுக்கு தவறாக பதிவு மாற்றமாகி விட்டது. இத்தவறைச் சரி செய்ய செல்லக்கண்ணு சிவகங்கை கோட்டாட்சியரிடம் முறையீடு செய்துள்ளார். இப்பிரச்சினை, நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இத்தவறான பதிவு மாற்றத்தைப் பயன்படுத்திக் கொண்ட மேற்படி நபர்கள், இவ்வட்டாரத்தில் கட்டப் பஞ்சாயத்து நாட்டாமை செய்து வரும் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் கோபால், விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் குணசேகரன் மற்றும் பிற எடுபிடிகளின் ஆதரவுடன் செல்லக்கண்ணுவின் மேற்படி புஞ்சை நிலத்தை அபகரிக்கத் திட்டமிட்டனர். அதன்படி கிராமக் கூட்டம் என்றும் கட்சிக் கூட்டம் என்றும் இழுத்தடிக்கப்பட்டு வலது கம்யூனிஸ்ட் கட்சியின் 'நீதி' விசாரணைக்கு செல்லக்கண்ணு உட்படுத்தப்பட்டார்.

'ஊர்ப் பொதுநலன்' என்ற மோசடியான காரணத்தைச் சொல்லி, நிலத்தை விட்டுக் கொடுக்குமாறு போலி கம்யூனிஸ்டுத் தலைவர்கள் கிராமக் கூட்டத்தின் பெயரால் கட்டப் பஞ்சாயத்து செய்ததை செல்லக்கண்ணு ஏற்க மறுத்துவிடவே, ''டேய்! இவனைக் கட்சியிலிருந்து நீக்குங்கடா; இவன் சொத்தை எடுக்காம விடறதில்லைடா!'' என்று வி.ச. தலைவர் குணசேகரன் உறுமியபடியே எச்சரிக்கை விடுத்தார்.

பின்னர், சிவகங்கையில் வழக்குரைஞர் தொழிலில் கிரிமினல்களாக உள்ள நபர்களின் உதவியுடன் செல்லக்கண்ணுவின் பூர்வீக நிலத்தை, ''ஊரணி'' என்று ரிக்கார்டு தயார் செய்து, அந்நிலத்தில் அவர் காலடி வைக்கக் கூடாது என தடையாணை கோரி ஆக்கிரமிப்பாளர்கள் வழக்கு தொடர ஏற்பாடுகள் செய்து கொடுத்து உதவினார். இதையறிந்த செல்லக்கண்ணு, வேறொரு வழக்குரைஞரின் உதவியுடன் வக்காலத்து போட்டு, ஆக்கிரமிப்பாளருக்கு இத்தடையாணை கிடைக்கவிடாமல் செய்து விட்டார்.

இது ஒருபுறமிருக்க, அல்லிவயல் கிராமத்துக்கு அருகில் பீக்குளம் என்ற கிராமத்தில் வசிக்கும் அய்யாசாமி என்ற பிற்படுத்தப்பட்டவரின் கிரையச் சொத்து, கிராமக் கணக்குப் பதிவேடுகளில் தவறாக அரசுச் சொத்தாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தெரிந்துகொண்ட அல்லிவயல் கிராமத்தினர் சிலர் அந்த 4 ஏக்கர் நிலத்தையும் அபகரிக்கத் திட்டமிட்டு வலது கம்யூனிஸ்ட் கட்சியின் நாட்டாமை குணசேகரன் - கோபால் கும்பலின் உதவியைக் கோரினர். அதன்படி 'இத்தலைவர்கள்' கிராமக் கூட்டத்தில் கலந்து கொண்டு, கிராமம் முழுக்க ஒற்றுமையாக இருந்தால் மேற்படி நிலத்தை அல்லிவயல் கிராமத்தினருக்கே கைப்பற்றித் தருவதாக வாக்குறுதி அளித்து பேரம் பேசியுள்ளனர். இதை அல்லிவயல் கிராமத்தைச் சேர்ந்த வலது கம்யூனிஸ்ட் கட்சி ஊழியரான வீ.செல்லக்கண்ணு கடுமையாக எதிர்த்துள்ளார்.

இரு கிராமங்களும் சாதி ரீதியாக பிளவுபட்டு மோதிக் கொண்டு கோர்ட் வரை சென்று இப்போதுதான் மெதுவாக இணக்கம் ஏற்பட்டு வருகிறது என்றும், இந்நிலையில் இப்படி அநியாயமாக நிலத்தைப் பறிக்க முயற்சித்தால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றும், அய்யாசாமி என்பவர் ஒரு மிட்டா மிராசு அல்ல; ஒரு சிறு விவசாயி என்றும், எனவே இத்தகைய தவறான முடிவுகளை ஏற்க முடியாது என்றும் செல்லக்கண்ணு கிராமக் கூட்டத்தில் போலி கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் ஏற்கெனவே வாதிட்டுள்ளார். அப்போதும் கூட இத்தலைவர்கள் உண்மை நிலைமையைப் பரிசீலிக்காமல், ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக நின்று செல்லக்கண்ணுவை எச்சரித்துள்ளனர்.

ஏற்கெனவே தமது கிரிமினல் சதிகளுக்கு உடன்பட மறுத்ததாலும், இப்போது தமது நாட்டாமையை ஏற்க மறுத்துவிட்டதாலும் ஆத்திரமடைந்த இப்போலி கம்யூனிஸ்டு தலைவர்கள், ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக அல்லிவயல் கிராம மக்களைத் தூண்டி விட்டுள்ளனர். ஊருக்குச் சேரவேண்டிய நிலத்தை செல்லக்கண்ணு முறைகேடாக அனுபவித்து வருவதாக போலிகளின் தவறான வழிகாட்டுதலால் தூண்டிவிடப்பட்ட இக்கிராமத்தைச்

நிலத்தைப் பறிகொடுத்த துயரத்தை கதறியமுது வாக்குமூலமாக அளிக்கும் செல்லக்கண்ணு.





தாழ்த்தப்பட்ட ஏழை விவசாயியின் நிலம் அநியாயமாகப் பறிக்கப்படுவதையும், போலி கம்யூனிஸ்டுகளின் அடாவடித்தனங்களையும் எதிர்த்து காளையார் கோவிலில் வி.வி.மு. நடத்திய ஆர்ப்பாட்டம்.

சேர்ந்த சுமார் 100 பேர் கடந்த 30.9.04 அன்று செல்லக்கண்ணுவின் பூர்வீக நிலத்தின் வரப்புகளை அகற்றி அந்நிலத்தை ஊரணியுடன் இணைத்து கரை போட்டனர். நிலத்திலிருந்த மரங்களை வெட்டிச் சாய்த்து, குடிசையைத் தீயிட்டுக் கொளுத்தி, நெல் மூடைகளைச் சூறையாடி, கரி மூட்டம் போடுவதற்காக சேர்த்து வைத்திருந்த சுமார் இரண்டு லாரி விறகுகளையும் அள்ளிச் சென்றனர்.

இதுதவிர, செல்லக்கண்ணுவை ஊரைவிட்டு தள்ளி வைப்பது, அவருடன் யாரும் பேசக்கூடாது; டீக்கடையில் டீ கூடத் தரக்கூடாது; இதை மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டு ஊரை விட்டு தள்ளி வைக்கப்படுவார்கள் என்று போலி கம்யூனிசத் தலைவர்களின் ஆலோசனைப்படி கிராமக் கூட்டத்தில் கட்டப்பஞ்சாயத்து முறையில் கட்டுப்பாடுகள் போடப்பட்டன. வழக்கு செலவுக்காகவும் போலீசை சரிகட்டவும் வீட்டுக்கு ரூ. 500/-ம் ஒரு மூடை நெல்லும் வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டன.

இக்கொடுஞ் செயலை எதிர்த்து காளையார் கோயில் காவல் நிலையத்தில் செல்லக்கண்ணு புகார் கொடுத்தும் கூட, போலீசார் 'கனமான' பக்கம் சேர்ந்து கொண்டு, பிரச்சினை கோர்ட்டில் இருப்பதால் எதுவும் செய்ய முடியாது என்று கூறி, புகாரைக் கூட பதிவு செய்ய மறுத்து விட்டனர்.

இது ஒருபுறமிருக்க, ஊர்க்கட்டுப்பாட்டை மீறி செல்லக்கண்ணுவுடன் உறவாடிப் பேசியமைக்காக, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பாண்டி என்பவரையும் ஆக்கிரமிப்பு சக்திகள் அடித்துக் காயப்படுத்தி, அவரையும் ஊரை விட்டுத் தள்ளி வைத்து செல்லக்கண்ணுவுக்குப் போட்ட அடக்குமுறைச் சட்டங்களை இவர் மீதும் ஏவிவிட்டு கொடுமைப்படுத்தினர். இதுபற்றி போலீசாரிடம் புகார் கொடுக்கச் சென்ற பாண்டியை, போலீசு நிலைய வாயிலேயே தடுத்த வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளரான கோபால், சாதியைச் சொல்லி திட்டியதோடு, மிரட்டி புகார் கொடுக்க விடாமல் விரட்டியடித்துள்ளார்.

பின்னர், கோபால் மீது தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பாண்டி புகார் கொடுத்தும் கூட போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆத்திரமடைந்த கோபாலின் தூண்டுதலின் பேரில், ஆக்கிரமிப்பு சக்திகள் பாண்டியின் சகோதரியினுடைய காலி வீட்டுமனையை ஆக்கிரமித்துக் குடிசை போட்டுக் கொண்டு அட்டூழியம் புரிந்து வந்தனர்.

இவ்வளவுக்கும் பின்னரே, இவ்வட்டாரத்தில் இயங்கும் வி.வி.மு.விடம் பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சினையைக் கொண்டு வந்தனர். இப்பிரச்சினையை நன்கு விசாரித்து புரிந்து கொண்டதும், புரட்சிகர அமைப்புகளின் துணையுடன் வி.வி.மு. இந்த விவகாரத்தை மாவட்ட ஆட்சியர், வருவாய் துறை அதிகாரி முதலானோரின் பார்வைக்குக் கொண்டு சென்றது. அதைத் தொடர்ந்து அதிகார வர்க்கமும் போலீசும் முதற்கட்டமாக பாண்டியின் சகோதரியினுடைய காலிமனையில் ஆக்கிரமிக்கப்பட்ட குடிசைகளை மட்டும் அகற்றினர். இதர மனித உரிமை மீறல், தாக்குதல்கள் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கண்டித்தும் உடனடி நடவடிக்கை எடுக்


**இப்போது விற்பனையில்...**

*தாராளவாதமும் அதற்கு எதிராக மார்க்சியமும்*

- பிரிட்டிஷ் எழுத்தாளர் எச்.ஜி. வெல்ஸ்-க்கு ஸ்டாலின் அளித்த பேட்டி

புதிய ஜனநாயகம் வெளியீடு — விலை ரூ. 10

**சோசலிசத்தில் வர்க்கப் போராட்டம்: மாவோவின் பாத்திரம்**

*- வில்லியம் ஹிண்டன்*

பு.ஜ.தொ.மு. வெளியீடு — நன்கொடை: ரூ. 10

*அம்பலப்பட்டது ஜெயேந்திரன் மட்டுமல்ல... தலித்-பார்ப்பன தரகு அரசியலும்தான்!*

*- சுகுணா திவாகர்*

புதிய ஜனநாயகம் வெளியீடு — விலை ரூ. 3

நூல்கள் கிடைக்குமிடம்:

**கீழைக்காற்று,**

10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,

சென்னை - 600 002. ☎044-28412367

www.padippakam.com

கக் கோரியும் 10.1.05 அன்று காளை யார் கோவிலில் வி.வி.மு. சார்பில் எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அல்லிவயல் மட்டுமின்றி சுற்றுப் புற கிராமங்களிலிருந்தும் திரளான விவசாயிகளும் பல்வேறு அரசியல் கட்சிகளின் செயல்வீரர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஆதரவ ளித்தனர். பாதிக்கப்பட்ட தோழர் செல் லக்கண்ணுவும் அவரது மனைவி இந்தி ராவும் தாங்கள் பட்ட கொடுமைக ளைக் கதறியழுது மக்கள் முன்னிலை யில் வாக்குமூலமாகப் பதிவு செய்த னர். இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து வலது கம்யூனிஸ்ட் கட்சியி லுள்ள புரட்சிகர அணிகள் வி.வி.மு.வில் இணைந்தவண்ண முள்ளனர். பகுதிவாழ் மக்கள், வலது கம்யூனிஸ்டு நாட்டாமைகளின் அட்டூ ழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்ற னர்.

இதற்கிடையே தங்களது கட்டப் பஞ்சாயத்து - அடாவடித்தனங்களால் அம்பலப்பட்டுப் போன வலது கம்யூ னிஸ்ட் கட்சியின் நாட்டாமைகள் ஆத் திரமடைந்து "உதார்" விட்டதோடு, காளையார் கோவிலில் வி.வி.மு.வை எதிர்த்து ஊர்வலமும் பொதுக்கூட்ட மும் நடத்தினர். அல்லிவயல் கிராமத் துப் பிரச்சினை பற்றியோ, அதில் தங் கள் தரப்பு நியாயத்தையோ விளக்க முற்படாமல் "டேய்! சங்கை அறுப் பேன், கண்ட இடத்தில் அடிப்பேன்; எங்ககிட்ட மோதாதே!" என்று ரௌடி கள் மொழியில் வீர வசனம் பேசிய தோடு, ம.க.இ.க. மாவட்ட அமைப் பாளர் தோழர் எழில்மாறனை தனிப் பட்ட முறையில் கீழ்த்தரமாக வசவு பாடித் தீர்த்தனர். இந்தக் கூட்டத்தில் வலதுகளின் விவசாயிகள் சங்க மாநி லத் தலைவர் குணசேகரன், முன்னாள் எம்.எல்.ஏ. தங்கமணி, மாவட்டச் செய லர் இராமச் சந்திரன் என்று பெரும் புள் ளிகள் பங்கேற்று உறுமினர்.

ஆனால், வலதுகளின் வண்ட வாளமே இம்மாவட்டம் முழுக்க சந்தி சிரிக்கிறது. கடந்த 22.1.05 அன்று வல துகளின் மானாமதுரை ஒன்றிய மாநாட் டில், திருவாளர் முத்தையா மீண்டும் ஒன்றியச் செயலாளராகத் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். வீட்டுமனை வியாபா ரம், மாதாந்திர குலுக்கல் சீட்டு, சாராயக் கடத்தல் மூலம் திடீர் பணக்கார அரசி யல்வாதியானவர், இப்போது வர்க்கப் போராட்டத் 'தளபதி'யாகி விட்டார்.

இப்படித்தான் தென் மாவட்டங்க ளில் வலது கம்யூனிஸ்டுத் தலைவர்கள் புதியவகை நாட்டாமையாக வலம் வருகின்றனர். டாடா சுமோ, செல் போன் சகிதமாக மக்களிடையே "பந்தா" காட்டுவது; அம்பலார்த்தன மாக கட்சி அணிகளை மிரட்டுவது; ஆதிக்க சாதி உணர்வுடன் அதிகாரம் செய்வது; அதிகாரிகள் - போலீசிடம் புரோக்கராகச் செயல்படுவது; இதையே மக்களிடம் சாதனையாகப் பீற்றிக் கொள்வது; மக்களைத் தவறாக வழிநடத்தி பல செலவுகளுக்கும் அவர் களிடமே வசூல் வேட்டையாடி பணம் குவிப்பது; இவர்களது அடாவடித்த னங்களை எதிர்ப்போர் மீது ஆதிக்க சாதி வெறியுடன் தாக்குதல் தொடுப் பது - என எண்ணற்ற மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் போலி கம்யூனிச நாட்டாமைகளின் முகவிலா சத்தை உழைக்கும் மக்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

வலது கம்யூனிஸ்ட் கட்சியின் விவ சாய சங்க செயலாளரான குணசேகரன், கம்யூனிசப் போர்வைக்குள் ஒளிந்து கொண்டுள்ள ஒரு ஆதிக்க சாதி நாட் டாமை. (இவரது சகோதரர் அகமுடை யார் சாதி சங்க தென் மண்டலச் செய லாளராக இருந்து கொண்டு நடத்திவ ரும் நாட்டாமை தனிக்கதை). சிவகங் கையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு ரவுடிக் கும்பலை வைத் துக் கொண்டு கட்டப்பஞ்சாயத்து செய்து வரும் குணசேகரன் தலைமை யிலான கும்பல், புரட்சிகர அமைப்புக ளின் தொடர்ச்சியான அம்பலப்படுத் தல் - போராட்டங்களால் வசமாக மாட் டிக் கொண்டு திணறுகிறது. அல்லிவ யல் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் புரட்சிகர அமைப்புகளின் போராட்டச் செங்கொடி உயர்ந்தோங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. அதற்கு முன் போலி கம்யூனிச நாட்டாமைக ளின் கொட்டம் ஒடுக்கப்படும் என்ப தில் சந்தேகமே இல்லை.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
சிவகங்கை.

## சுனாமி நிவாரணப் பணி: புரட்சிகர அமைப்புகள் மீது அவதூறு - பொய் வழக்கு!

"அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!" என்ற முழக்கத்தை முன்வைத்து, தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்வதோடு, சுனாமி நிவாரணப் பொருட்களும் நிதியும் திரட்டி நேர்மையான முறையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன, ம.க.இ.க., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. மற்றும் பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்பு கள்.

அதன் ஒருபகுதியாக சேலம் மாவட்டம் மேச்சேரியில் விளக்கக் கூட்டம் ஏற்பாடு செய்து, மேட்டூர் பகுதியில் உள்ள ராம் நகரில் கடந்த மாதம் எட்டாம் தேதி நிதி வசூலில் ஈடுபட் டிருந்தார்கள், விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர் கள். அப்போது ஏற்கனவே கஞ்சா வழக்கில் சிக்கியுள்ள, ஜெமினி லாட்ஜ் உரிமையாளர் ஜெமினி என்பவன் தோழர் களை சாக்கடை நடையில் திட்டி ஆத்திரமூட்டி வம்புக்கிழுத் தான். தோழர்கள் தக்க பதில் கொடுத்து விட்டு தம் பணிக ளைத் தொடர்ந்தனர். இருந்தும் போலீசுக்கு தகவல் கொடுத்து வரவைத்து, ஐந்து தோழர்களை போலீசு நிலையம் கொண்டு சென்று, கொள்ளை மற்றும் வழிப்பறிப்பில் ஈடுபட்டதாகப் பொய்வழக்குப் போட்டதோடு, நக்சலைட்டுகள் மிரட்டி நிதி வசூலித்ததாகவும், பணம் பறித்ததாகவும் பத்திரிக்கை, வானொளிகளில் செய்தி வரவைத்தனர்.

அரசின் சுனாமி நிவாரண மெத்தனம் அம்பலப்படுவதா லும், நிவாரணப் பொருட்களை ஆளும் கட்சியினர் கொள் ளையடிப்பதற்குத் தடையாக இருப்பதாலும் ஆத்திரமுற் றுள்ள ஆளும் கட்சி குண்டர்களுக்குத் துணைபோகவும், புரட்சிகர அமைப்புகள் புதிய இடங்களில் கால் பதிப்பது குறித்து போலீசு ஆத்திரமடைவதாலும் இத்தகைய சதிச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

"அதிரடிப்படை வேட்டை நிறுத்தப்பட்டதால் சந்தன வீரப்பன் காட்டில் நக்சலைட்டுகள் ஊடுருவல்" "சுனாமி நிதி கேட்டு நக்சலைட்டுகள் வெடிகுண்டு மிரட்டல்" என்று செய்தி வெளியிடச் செய்தது, போலீசு. அமைப்பின் மறுப்புச் செய்தியை இரண்டு மாலை ஏடுகள் வெளியிட்டன. உறுதி குலையாத தோழர்கள் தமது உரிமைகளுக்காக பட்டினிப் போராட்டம் நடத்தி எதிரிகளின் சதியை முறியடித்தனர்.

இத்தோழர்கள் மற்றும் அருகிலுள்ள பென்னாகரம் பகுதி தோழர்களும் பொதுமக்களின் எழுச்சிமிகு ஆதரவோடு ஒரு லாரி நிறைய நிவாரணப் பொருட்களும், நிதியும் திரட்டி கட லூர் ம.க இ.க. மற்றும் பு.மா.இ.மு. நிவாரண முகாம் மூலம் விநியோகித்தனர்.

*தகவல்: வி.வி.மு. பென்னாகரம்.*


படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

ரம் - பாம்பு, தேள், பூரான் போன்ற ''விஷ ஜந்துக்கள்'' வாழும் குடியிருப்புதான் சங்கரமடம் என்று நிரூபணமானது.

பெரியார் ஈ.வெ.ரா. வழி வந்த பகுத்தறிவு, சுயமரியாதை பாரம்பரிய உரிமை பாராட்டும் கருணாநிதி, சங்கராச்சாரிகள் - சங்கரமடம் இந்த அளவுக்கு அம்பலமாகி, நெருக்கடியில் சிக்கியுள்ளதை உள்ளபடியே வரவேற்று மேலும் உறுதியான சரியான நடவடிக்கைக்குக் கோரியிருக்க வேண்டும் ஆனால் ''ஜெயேந்திரரை 'டீல்' செய்வது அளவுக்கு அதிகமாக உள்ளது. அவருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே தனிப்பட்ட விசயமும் இருப்பது தெரிய வந்துள்ளது, அதையும் மறந்துவிட முடியாது. அவர் கைதில் சந்தேகம் உள்ளது; இதற்குப் பின்னால் சில விசயங்கள் இருக்கின்றன. இதில் ஜெயலலிதாவைப் பொருத்தவரை பழிவாங்கும் பின்னணி இருக்கிறது. வீரப்பன் விசயத்திலும் சரி, சங்கராச்சாரி கைதிலும் சரி ஏற்பட்டுள்ள சந்தேகங்களுக்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை. சங்கரராமன் கொல்லப்பட்டு இரண்டரை மாதம் கழித்துத்தான் சங்கராச்சாரி கைது நடந்துள்ளது. இடையில் நடந்தது என்ன? தாமதத்துக்குக் காரணம் என்ன? வருகிற செய்திகளை எல்லாம் பார்க்கும்போது இதிலும் சந்தேகம் ஏற்படுகிறது'' என்கிறார், கருணாநிதி.

வீரப்பன் விவகாரமும், சங்கராச்சாரி விவகாரமும் இந்த அரசால் ஒரே மாதிரியா நடத்தப்படுகின்றன? வீரப்பன் அதிரடிப்படையால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். வீரப்பனை அவன், இவன் என்று ''சன்'' தொலைக்காட்சியும் பார்ப்பன ஆதிக்கமிகு செய்தி ஊடகமும் இழிவாகப் பேசும் அதேசமயம், ஜெயேந்திரனுக்கு போலீசும் செய்தி ஊடகமும் எவ்வளவு பயபக்தியுடன் மரியாதை கொடுக்கின்றனர்! மலம் கழிப்பதற்கு வாழை இலை, சிறையிலும் பார்ப்பனக் கைதி சமையல், பார்ப்பன போலீசு பணிவிடை, ''அரிசன - சூத்திர'' போலீசு கைபடாமல் மரியாதையுடன் நடத்தப்படுகிறார். இருந்தும் ஜெயேந்திரனை ''டீல்'' செய்வது அளவுக்கு அதிகமாகக் கருணாநிதிக்குத் தெரிகிறது. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ''இந்துதுவேஷி'' என்று இதுவரை கருணாநிதியை ஏசி வந்த இராம.கோபாலன், சோ, குருமூர்த்தி மற்றும் பிற சங்கராச்சாரி - அத்வானி சீடர்களும் பெரியார் - அண்ணாதுரையின் அரசியல் வாரிசு கருணாநிதியும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள்.

> தமிழக அரசியலில் தீண்டத்தகாத தீய சக்தி என்று ஒதுக்கப்பட்டு நிற்கிறார், ஜெயா. அந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு புண்ணுக்குப் புனுகு தடவுவது போல சங்கரராமன் கொலை மற்றும் சங்கர மட விவகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார். இதன் பொருள், சங்கராச்சாரிகள் மற்றும் சங்கரமடக் குற்றங்கள் எல்லாம் உண்மையல்ல என்று ஒதுக்கிவிடக் கூடியவை அல்ல.

சங்கரராமன் கொலை, ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் அர்ச்சகர் மாதவன் தாக்கப்பட்ட சம்பவங்கள், சங்கர மட முறைகேடுகள் மீது ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகளுக்குப் பழிவாங்கும் பின்னணி இருக்கிறது, ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று கருணாநிதி பேசுகிறார். சங்கராச்சாரிகள் மீதும் சங்கரமடத்தின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் இந்து மதத்தின் மீதான தாக்குதல், அவற்றுக்கு பின்னால் ஒரு சர்வதேச சதி இருக்கிறது என்று பா.ஜ.க., சோ, குருமூர்த்தி வகையறாக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்தப் பின்னணி - சதி என்னவென்று அவர்கள் யாருமே தெளிவுபடுத்துவதில்லை. சங்கராச்சாரிகள், சங்கரமடத்திற்கு எதிரான வழக்குகளைப் பலவீனப்படுத்தி சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் காப்பதற்காகவே திட்டமிட்டுச் செய்யப்படும் பொய்ப்பிரச்சாரம் தான் இவை என்பதில் சந்தேகமில்லை.

ஜெயலலிதாவைப் பொருத்தவரை, பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தின் அரசியல் தலைமைச் சக்தியாக, அத்வானி, மோடி, பால்தாக்கரேவுக்கு இணையாகத் தன்னை அடையாளங் காட்டிக் கொண்டவர். அதற்கு விலையாக நடந்து முடிந்த 2004 நாடாளுமன்ற தேர்தல்களில் படுதோல்வியடைந்ததோடு தமிழக அரசியலில் தீண்டத்தகாத தீய சக்தி என்று ஒதுக்கப்பட்டு நிற்கிறார். அந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு புண்ணுக்குப் புனுகு தடவுவது போல சங்கரராமன் கொலை மற்றும் சங்கர மட விவகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார். இதன் பொருள், சங்கராச்சாரிகள் மற்றும் சங்கரமடக் குற்றங்கள் எல்லாம் உண்மையல்ல என்று ஒதுக்கிவிடக் கூடியவை அல்ல. அவ்வளவும் கடும் தண்டனைக்குரிய பாரிய கிரிமினல் குற்றங்கள். இன்று இந்த வழக்குகளில் உறுதிகாட்டும் ஜெயலலிதாவே தனது அரசியல் நோக்கங்கள் நிறைவேறியவுடன் இன்னொரு குட்டிக் கரணம் போட்டு எதிர்ப்பக்கம் தாவிவிடுவார். பா.ஜ.க.வுடன் கூட்டு வைத்துக் கொண்டது தவறு என்று பகிரங்க மன்னிப்பு கேட்டு, ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் கூட்டுச் சேர்ந்து பார்ப்பன பயங்கரவாதத்தை ஏவியவர்தான், ஜெயலலிதா!

இன்னொரு உண்மையும் கவனிக்கத்தக்கது. இந்த வழக்குகளை வைத்து ஜெயலலிதா அரசியல் ஆதாயம் அடைந்துவிடுவார், அதற்கு இடந்தரக் கூடாது என்கிற மேலோட்டமான அரசியல் காரணத்துக்காக கருணாநிதி, சங்கராச்சாரி - சங்கர மட விவகாரங்களில் இப்படிப் பேசுகிறார் என்றும் கருதக் கூடாது. கருணாநிதி இப்போது சினிமாவுக்கு கதை-வசனம் எழுதுவதைத் தொழிலாகக் கொண்டவரும் அல்ல; இரயில் தண்டவாளத்தில் தலை வைத்துப் போராடும் அரசியல்வாதியும் அல்ல. பல ஆயிரம் கோடி வரவு - செலவு செய்யும் தரகு முதலாளி குடும்பத்தின் கொள்ளுத்தாத்தா. கருணாநிதி, - ''இந்து'' ராம் ஆகியோரை வர்க்க பாசம் இணைக்கிறது. அதேவர்க்க உணர்வுதான் சங்கரமடத்தைக் காப்பாற்றும்படி அவர்களை உந்துகிறது. இதன் காரணமாகத்தான், ராஜீவ் கொலைப்பழி வந்தபோதும், ஆட்சிகள் கலைக்கப்பட்ட போதும், ஜெயலலிதாவின் பாசிச ஒடுக்குமுறையின் கீழ் தேர்தல்கள் கேலிக்கூத்தாக்கப்பட்டு மற்றபிற அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் புறக்கணித்த போதும், கருணாநிதி இந்த ஒட்டுமொத்த அரசியல் அமைப்பின் மீதும் மக்கள் நம்பிக்கையைக் குலைக்கும் வகையில் நடந்து கொள்ளாது, எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு சமரச நிலையெடுத்தார்.

எனவே, சங்கராச்சாரிகளும் சங்கரமடக் கும்பலும் தண்டிக்கப்பட வேண்டும், சங்கரமடம் என்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான பார்ப்பன பாசிச பயங்கரவாதக் கூடாரம் கூண்டோடு கலைக்கப்பட வேண்டும். இதற்குத் தடையாக நிற்கும் சக்திகள், சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்கள் முறியடிக்கப்பட வேண்டும். ●


படிப்பகம்

www.padippakam.com

## தனியார்துறை இடஒதுக்கீடு:

# கொந்தளிக்கும் சமூக நெருக்கடிக்கு ஒரு வடிகால்

அரசுத் துறையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான கதவுகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருவதைத் தொடர்ந்து, தனியார் துறையில் இவற்றுக்கான இடஒதுக்கீட்டுக் கோரிக்கை வலுத்து வருகிறது.

அநேகமாக எல்லா ஆட்சியாளர்களும் ஓட்டுக் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை ஆதரிப்பதாகத் தெரிகிறது. பார்ப்பன மற்றும் முதலாளிய சனாதனிகள் தவிர, தனியார் துறை முதலாளிகளிலும் பெரும்பான்மையினர், இக்கோரிக்கையின் தவிர்க்க முடியாத நிலையை அங்கீகரித்து ஏற்கத் தொடங்கி விட்டனர்.

கத்தியின்றி, இரத்தமின்றி சுதந்திரத்தை வென்றுவிட்டதாக இந்திய தேசியவாதிகள் கொண்டாடுவதைப் போல, கடுமையான போராட்டமின்றி தனியார்துறை இட ஒதுக்கீட்டை பெற்றுவிடும் சமூக நீதிக்காரர்களும் இதைக் கொண்டாடலாம்.

தனியார் துறையிலும் இடஒதுக்கீடு கேட்பவர்களும், இடஒதுக்கீடு வழங்குபவர்களும் ஒத்த கருத்துக்கு வந்து விட்டதால் இக்கோரிக்கை நிறைவேறுகிறதா? இல்லை.

இடஒதுக்கீடு ஒரு வகுப்புரிமை என்று சமூக நீதிக்காரர்கள் கூறிக் கொள்ளுவதற்குக் கூறப்படும் காரணம், ''உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத சாதி - வர்ண ரீதியிலான சமூக ஒடுக்கு முறை இங்கே உள்ளது. அதற்கு ஈடாக வழங்கப்பட வேண்டியதுதான் இடஒதுக்கீடு.''

ஆனால், இப்போது தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு என்பதை ஆளும் வர்க்கங்களும் ஒப்புக் கொள்வதற்கான காரணம் அதுவல்ல. உலகின் வேறு பல நாடுகளிலும் இடஒதுக்கீடு அல்லது அதுபோன்ற ஏதாவது ஒரு பங்கீடு அவசியமாக உள்ளது என்று ஆளும் வர்க்கத்தினர் கருதுவதுதான் இதற்குக் காரணம்.

முதலில், இடஒதுக்கீடு என்பதே இந்த நாட்டுக்கே உரிய தனிச்சிறப்பான ஒரு சமூகநீதி ஏற்பாடு என்பதே உண்மையல்ல. இடஒதுக்கீடு என்பது ஏதாவது ஒரு காரணத்தால், ஏற்கனவே 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒடுக்கும் - ஆளும் வர்க்கங்களாலேயே அமலாக்கப்பட்டு வரும் ஒரு ஏற்பாடுதான். கறுப்பர்களுக்கு எதிராக வெள்ளை நிறவெறியர்கள், ஆதிவாசி பழங்குடியினருக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்கள், நீக்ரோ அடிமைகளுக்கு எதிராக காலனிய அடிமை முதலாளிகள் நடத்திய கொடிய சமூக ஒடுக்குமுறை, உலகின் பல நாடுகளில் இடஒதுக்கீட்டை அவசியமாக்கியது.

மேற்கண்ட சமூக ஒடுக்குமுறை காரணமாக முதலாளித்துவ சமுதாயப் பொருளாதாரமும் பண்பாடும் ஊனமுற்றதாகவே, குறைபாடுகள், ஏற்றத் தாழ்வுகள் நிரம்பியதாகவே உள்ளன. இதனால் முதலாளித்துவ ஜனநாயக அரசியல் வழங்கும் சமவாய்ப்பு, சம உரிமை என்பதெல்லாம் அப்பட்டமாகவே போலித்தனமானதாக, பெயரளவுக்கானதாக, கேலிக்குரியதாகவே இருக்கிறது. இத்தகைய நிலைமையால் சமூக ரீதியில் பாதிக்கப்பட்டவர்களின் இழப்புகளுக்கு ஈடு செய்வது என்கிற முறையில்தான் பல நாடுகளிலும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் புகுத்தப்பட்டு ஏகாதிபத்தியங்களின் பன்னாட்டு தொழில்கழகங்கள், தேசங்கடந்த தொழில் கழகங்களின் தேவைக்காக நாட்டின் பொருளாதாரக் கட்டுமானம் முழுவதும் மறு ஒழுங்கு செய்யப்படுகிறது. ''மக்கள் நல அரசு'' என்ற தோரணையில் அரசு மேற்கொண்டு வந்த பல்வேறு சமூக நலப் பணிகளும் கைவிடப்பட்டு விட்டன. ஆரம்ப சுகாதாரம், அடிப்படைக் கல்வி, சாலை - போக்குவரத்து, மருத்துவம், கல்வி, குடிநீர் மற்றும் பிற வசதிகளைச் செய்து தரும் பொறுப்புகளில் இருந்தும் அரசு கழன்று கொண்டு வருகிறது.

''வாங்கும் சக்தி உள்ளவர்கள் மட்டுமே வாழும் உரிமையுள்ளவர்கள்'' என்பது புது சமூக நீதியாகி விட்டது. அதாவது, குடிப்பதற்கு நீர், சுவாசிப்பதற்குக் காற்று, மனிதர்கள் மலம்-சிறுநீர் கழிப்பதற்கு, இறந்தபின் பிணத்தை அடக்கம் செய்வதற்கு, எல்லாவற்றுக்குமே பணம் செலுத்த வேண்டும். இயற்கையாகக் கிடைக்கும் குடிநீரையும், காற்றையும் கூட மாசுபடுத்தி விடுவதன் மூலம், இவற்றையும் தக்க புட்டிகளில் அடைத்து விற்கவும் வாங்கவுமான முறையை புகுத்திவிட்டார்கள், முதலாளிகள்.

அப்படியானால் வாங்கும் வசதியற்ற ஏழை பாழைகளை என்ன செய்வது? மலிவான கூலி அடிமைகளை வழங்கீடு செய்யும் ஒரு உழைப்பாளர் கூட்டத்தை சேமிப்புப் படையாக வைத்துப் பராமரிக்க வேண்டாமா? அதற்கு அரசு பொறுப்பு இல்லையென்றால் (இதற்காகத்தான் மக்கள் நல அரசு என்ற தோரணையிலான பணிகளை அரசு மேற்கொண்டு வந்தது, மற்றபடி மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல) இனி, யார் பொறுப்பேற்பது?

இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக ஏகாதிபத்தியப் பொருளாதார வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கும் புதிய நீதிதான், ''கூட்டுப் பங்கு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு''. கேரளாவில் உள்ள பிளாச்சிமடா கிராம மக்களுக்கு நாள்தோறும் நல்ல குடிநீர் வழங்குகிறது கோகோ - கோலா கம்பெனி. கும்மிடிப்பூண்டியில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறது டுபாண்ட் கம்பெனி. தூத்துக்குடி வட்டாரத்தில் ''ஸ்டெர்லைட்'' நிறுவனம் பல சமூக சேவைகளைச் செய்கிறது.

காரணம், இந்த நிறுவனங்கள் நீரையும், நிலத்தையும் காற்றையும் நச்சுப்படுத்துகின்றன என்று மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராடுகிறார்கள். அதற்கு ஈடு கொடுப்பதற்கு இந்த நிறுவனங்கள் சமூக சேவைகள் புரிகின்றன. அந்தந்த வட்டாரத்தில் ஆரம்பப் பள்ளிகள் நடத்துவது, சமூகக் கூடங்கள் கட்டித் தருவது, உள்ளூராட்சிகளுக்கு நிதி உதவி தருவது, சாலை போடுவது, விளக்குகள் போடுவது, மருத்துவ முகாம்கள் நடத்துவது கோவில் பராமரிப்பு, திருவிழாக்கள் நடத்துவது - என்று பலவகையான சேவைகளில் ஈடுபட்டுத் தமது சமூகப் பொறுப்புகளை நேரடியாகவே நிறைவேற்றுகின்றன.

அந்தக் காலத்தில் பின்தங்கிய நாடு


படிப்பகம்

www.padippakam.com

கள் காலனிகளாக்கப்பட்டபோது, ஏகாதிபத்தியவாதிகளின் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பைபிளோடு பாதிரியார்கள் அனுப்பப்பட்டனர். இப்போது இந்த நாடுகள் மறுகாலனிகளாக்கப்படும்போது கூட்டுப் பங்கு கம்பெனிகளுக்கான சமூகப் பொறுப்புகளைக் கவனித்துக் கொள்வதற்காக பல ஆயிரம் கோடி டாலர்களை வாரி இறைத்து அரசு சாரா நிறுவனங்களும் சமூக நலத் தன்னார்வத் தொண்டர்களும் இங்கேயே உருவாக்கப்படுகின்றனர். கிராமியப் பண்பாட்டுப் பராமரிப்புக்கான சுவாமிநாதனின் பவுண்டேசன், இராமதாசு - அன்புமணியின் பசுமைதாயகம், கிறித்துவ அமைப்புகளின் தலித் - விடுதலை இயக்கங்கள், எயிட்ஸ் விழிப்புணர்வு அமைப்புகள், 'மார்க்சிஸ்டு'களின் அறிவொளி இயக்கம் - இப்படிப் பலநூறு "சமூகப் பொறுப்புகளை" ஏகாதிபத்திய-தரகு ஆட்சியாளர்கள் அவசியமானவை என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கு அரசு பொறுப்பில்லை என்று விலகிக் கொள்ளும்போது, மாற்று ஏற்பாடாக "கூட்டுப் பங்கு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு"ம் கிடையாது என்றானால், கொந்தளிக்கும் சமூக உணர்வுகளுக்கு வடிகால் எதுவும் இல்லாமல் போகும். இதை நன்கு உணர்ந்துதான் ஏகாதிபத்தியத் தரகு முதலாளிகள் பல்வேறு "மக்கள் நலப் பணிகளில்" பங்கேற்க முன்வருகின்றனர். அத்தகைய சமூகப் பொறுப்புகளில் ஒன்றாகத்தான் தனியார்துறையிலான இட ஒதுக்கீடுக்கும் அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தெளிவான சட்டதிட்டங்களும், வழிகாட்டும் நெறிமுறைகளும் இருந்தபோதும் அரசுத்துறையிலான இடஒதுக்கீடு குதறி எடுக்கப்படுகிறது. வெட்டிச் சிதைக்கப்படுகிறது. அவ்வாறான வரையறைகளோ, முறைப்படி அமலாக்குவதற்கான அமைப்புகளோ, விதிமுறைகளோ, கட்டுப்பாடுகளோ இல்லாத தனியார் துறையிலான இட ஒதுக்கீடு வெறும் கண் துடைப்பாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக, ஏற்கனவே உள்ள தொழிற் தகராறு கொள்கைகள் எல்லாம் தொழிலாளர் விரோதக் கூறுகளை உள்ளடக்கித்தான் இருக்கின்றன; போதாக்குறைக்கு, இப்போது அரசு புகுத்துவதற்கு எத்தணிக்கும் புதிய தொழிற்கொள்கை, தொழிலாளர்களைத் தரகு முதலாளிகளின் கூலிக் கொத்தடிமைகளாக்கக் கூடியது.

ஆகவே, தனியார்துறையிலான இடஒதுக்கீடு ஏகாதிபத்திய தரகு முதலாளிகளுக்கு எதிராக எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. அதற்கு மாறாக, இத்தகைய இடஒதுக்கீடு பெறும் சமூகத்துக்கு ஏதாவது நன்மை பயக்குமா? அம்பேத்காரிய, தலித்திய ஆய்வாளர் ஆனந்த் தெல்தும்டே பின்வருமாறு கூறுகிறார்: (திருமாவளவனின் "தாய் மண்" ஏட்டில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இதே கருத்தை பு.ஜ. எழுதினால் அதன் மீது பாய்ந்து குதறுவதற்கு "காலச்சுவடு" ரவிக் குமார்கள் காத்திருப்பது வேறு விசயம்).

"இடஒதுக்கீடு என்பது தாழ்த்தப்பட்டவர்களின் நன்மைக்காகவே அல்ல. இடஒதுக்கீடு இல்லாமலே அவர்கள் மேலெழுந்து வந்துள்ளனர். துரதிருஷ்டவசமாகத் தங்களுக்குத் தெரியாமலேயே தாழ்த்தப்பட்டவர்கள் இடஒதுக்கீட்டுக்கு பெரிய நட்டஈட்டைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். வரவு - செலவு கணக்கு போட்டுப் பார்த்தால், இறுதியாக, இடஒதுக்கீடு அவர்களுக்குச் சாதகமாக இருந்ததா என்பதும் கூடச் சர்ச்சைக்குரியதாகவே இருக்கும். இடஒதுக்கீடு அவர்களின் போராட்ட குணத்தை மழுங்கடித்து, அவர்களை அமைப்பினுள் உள்ளிழுத்துக் கொண்டது. மேலும், இது மேல்தட்டு தலித்துக்களை வெறுமனே பார்ப்பன எதிர்ப்புக் குரல் எழுப்பும், ஆனால், பார்ப்பனியத்துக்கு சேவை செய்யும் வகுப்பாக ஆக்கிவிட்டது. (செ.கு. தமிழரசன், திருமா, கிருஷ்ணசாமி, ரவிக்குமார், மாயாவதி, ராமவிலாஸ் பஸ்வான், அவதாலே போன்றவர்களை மனதில் வைத்து இப்படி எழுதப்பட்டதோ! - பு.ஜ.) சாதி ஒழிப்பு என்ற நெடுங்கால விடுதலையை நோக்கிப் போகிற திட்டத்திலிருந்து தாழ்த்தப்பட்டவர்களை விலக்கி விட்டது. இடஒதுக்கீட்டின் பலன் எப்போதும் தமக்குக் காத்திருக்கும் என்ற சுயநலத்தைத் தாழ்த்தப்பட்டவர்கள் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். இடஒதுக்கீடு ஒருவித சாதிவட்டத்தை உருவாக்கி, நீண்டகாலப் பிரச்சினைகளை மழுங்கடித்துவிட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இது எந்தவித நன்மையும் செய்யப் போவதில்லை. அவர்களது தினசரி தேவைகளைப் பாதுகாக்கும் தந்திரமான நடவடிக்கையாக மட்டுமே இது இருக்கும். உயர்சாதியினரின் இனவெறித் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்து, தமது உரிமைகளை நிலைநாட்ட உதவும் சக்தியாக இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கட்டாயம் தேவைதான். ஆனால், அதுவே பிரச்சினைக்குத் தீர்வாக இருக்காது." (தாய்மண், அக்.2004, பக். 49-50)

இடஒதுக்கீடு என்பது-அரசுத்துறையோ, தனியார்துறையோ-சமூகநீதிக்காரர்கள் கூறிக் கொள்வதைப் போல உரிமைப் போரின் விளைவுமல்ல, சமுதாயப் புரட்சிக்கான வழியோ, தீர்வோ அல்ல என்பதைப் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்; ஒரு சமூகச் சீர்திருத்த நடவடிக்கை என்றும் கூறி வந்திருக்கிறோம். இருந்தபோதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், உடல் உழைப்புச் சாதிகளான உண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கப்படுவதை சரியானதென்று ஆதரித்தே வந்திருக்கிறோம். அதேசமயம் பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்றுகூறிக் கொண்டு உண்மையில் ஆதிக்கசாதிகள் இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பதவிச் சண்டையில் ஈடுபடுவதையும், பார்ப்பன மற்றும் பிற மேல் சாதிகள் இடஒதுக்கீட்டிற்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதையும் கடுமையாக எதிர்த்துள்ளோம்.

எஸ்.சி./எஸ்.டி. நலச் சங்கத்தினர் தனியார்துறையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தக் கோரி நெய்வேலியில் நடத்திய மாநாடு.





படிப்பகம்

www.padippakam.com

இந்த அடிப்படையில் தனியார்துறையி லான இடஒதுக்கீடு ஆதரிக்க வேண்டி யதாகிறது.

அதுமட்டுமல்ல; தனியார்துறையி லான இடஒதுக்கீட்டை பார்ப்பன - முத லாளிய சனாதனிகள் எவ்வளவு மூர்க்க மாக எதிர்க்கிறார்கள், அதற்காக ஒடுக் கப்பட்ட சாதி மக்களை எவ்வளவு கேவலமான முறையில் இழிவுபடுத்து கிறார்கள்; வேறு பிற காரணங்கள் இருப்பினும், இந்த ஒரே ஒரு காரணத் துக்காகவே தனியார்துறையிலான இட ஒதுக்கீடு ஆதரிக்கத்தக்கதாக உள்ளது.

சென்னையிலுள்ள ஐ.ஐ.டி என்ற உயர் கல்வி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பி.வி. இந்திரேசன் என்ற பார்ப்பான் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் நச்சு கக்கியிருக்கிறான். இந்தப் பார்ப்பன அறிவுஜீவி சொல் கிறான், தனியார் துறையில் இடஒதுக் கீடு கேட்பது, பொன்முட்டையிடும் வாத்தை அறுத்து ஆதாயம் தேடும் பேராசையாம். தன் சொந்த பலம், சக்தி - செல்வாக்கைக் கொண்டு எந்தத் தொகுதியிலும் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்றான பிறகு, அரசியலை யும், அரசியல்வாதிகளையும் பழிதூற் றுவதை வழக்கமாக்கிக் கொண்ட அக்கி ரகாரத்து பார்ப்பானுக்குரிய அதே பாணியில், அதிகார அரசியல் வாதி கள்தாம் இப்படிப் பொன்முட்டையி டும் வாத்தை அறுப்பதற்கு முயலுகி றார்களாம்.

இந்தப் பார்ப்பான் ஒரு கதை சொல் கிறான்: ஆதிகாலத்தில் வேட்டையாடி யும், இயற்கையில் விளைந்த உண வைச் சேகரித்தும் வாழ்ந்த மனிதர்கள் அழிவுக் கருவிக்ளான கோடாரி, வில்-அம்புகளை மட்டுமே உருவாக்கி னார்கள்; வேறு எதையும் உற்பத்தி செய்யாது, அழிவு வேலைகளை மட் டுமே செய்து வாழ்ந்து வந்தார்களாம்.

அடுத்துவந்த உழவர், நிலத்தைப் பண்படுத்தி, உழுது, விதைத்து, விளை வித்து, அறுவடை செய்து எதிர்காலத் துக்கும் சேமித்து வைத்தானாம். இந்தப் போக்கில் உழவன் மேலும் மேலும் உற் பத்திக்கான கருவிகளை மட்டுமே கண்டுபிடித்து, அழிவுக்கான ஆயுதங் களை உருவாக்கவில்லை; அதனால் உழவர்கள் பலவீனமானவர்களாக வும், வேட்டையாடி - உணவு சேகரித்து வாழ்ந்தவர்கள் பலசாலிகளாகவும் இருந்தாலும், இயற்கை ஆதாரங்கள் அழிந்து வந்ததால் இவர்களின் சாவு விகிதம் அதிகமாக இருந்ததாம்.

அதைப்போலவே, தற்போதுள்ள வேட்டைக்காரர்கள், உணவு சேகரிப்ப வர்களின் ஜனநாயகத்தில், பதவிகளை வேட்டையாடுவதற்கான கருவியாகத் தேர்தல்களைப் பயன்படுத்தி அரசியல் ஆதிக்கம் பெற்றுவிடும் இடஒதுக்கீடு கோரும் சாதிகள், உழவர்களைப் போல வேலை வாய்ப்புகளை விளை விப்பவர்களிடமிருந்து ஆதாயங்க ளைப் பறித்துக் கொள்கின்றனவாம்!

சில குடும்பங்கள் (பார்ப்பனக் குடும்பங்களைத்தான் இப்படிச் சொல் கிறார் இந்திரேச அய்யர்) தம் பிள்ளை களைச் சின்னஞ்சிறார்களாக இருக்கும் வயதிலேயே எதிர்காலத்தைப் பற்றி கருத்தில் கொள்ளுமாறு பயிற்றுவித்து, கற்பித்து வளர்க்கிறார்கள். இவர்கள் நீண்டகாலத்துக்குப் பிறகு, தகவல் தொழில்நுட்பத் துறை (கணினித் தொழில்) அல்லது உயிரித் தொழில் நுட்பத் தொழிலில் வேலைகளை அறு வடை செய்து கொள்ளுகிறார்களாம்.

இன்னொரு வகைக் குடும்பங்கள் தம் பிள்ளைகளை நன்கு பயிற்றுவித்து வளர்ப்பதில்லை; உழவர்களை விட வேட்டைக்காரர்களிடையே சாவு விகி தம் அதிகமாயிருப்பதைப் போல, இவர்களிடையே கல்வியைப் பாதி யில் கைவிடுபவர்கள் அதிகமாக உள்ளனர்; இவர்கள் எதிர்காலத்தைத் திட்டமிடுவதில்லை; அதற்குப் பதி லாக எதிர்காலத்தை டாடா மோட் டார்ஸ் அல்லது இன்போசிஸ் ஆகிய நிறுவனங்களில் காண்கிறார்களாம். வேட்டையாடுவதில் வல்லவர்களான இவர்கள் தங்களை ஒடுக்கப்பட்டவர்க ளைப் போலவும், டாடா, பிரேம்ஜி மற் றும் நாராயண மூர்த்தி போன்றவர் களை வில்லன்களாகவும் சித்தரித்து, இடஒதுக்கீடு பெற்று ஆதாயம் அடை கிறார்களாம். அதாவது உழைக்காம லேயே, திறமை இல்லாமலேயே ஆதா யம் அடைகிறார்களாம்.

இந்திரேச அய்யரிடம் ஒரு சின்ன சந்தேகம் கேட்க வேண்டியுள்ளது. ''அய்யரே அய்யரே! அந்த வேட்டைக் காரன், இந்த உழவன் கதையெல்லாம் சரிதான். அவன் கோடாரி, வில்-அம்பு வைத்துக் கொண்டு ஏதோ வேட்டை யாடி, அற்ப ஆயுளிலே செத்தான்! இவன் உழுபடைக் கருவிகளைக் கொண்டு விவசாயம் பார்த்து விளை பொருளைச் சேர்த்து வைத்து, கொஞ் சம் கூடுதல் காலம் வாழ்ந்து மடிந்தான். உங்கள் மூதாதையர்கள் பூணூலையும், தர்ப்பைப்புல்லையும் மட்டுமே ஆயுதமா கக் கொண்டு எதைத்தான் விளைவித் தார்கள், இவ்வளவு காலமும் செல்வச் செழிப்போடு வாழ்கிறார்களே அந்த இரகசியத்தை மட்டும் சொல்லி விடுங் களேன், அய்யரே!''

ஏழேழு ஜென்மத்துக்கும் கல்வி உரிமை, வழிபாட்டு உரிமை, சொத்து ரிமை, வாழ்வுரிமை மறுக்கப்பட்டு, உழைப்பதும், ஆதிக்க சாதிகளுக்கு ஊழியஞ் செய்வதுமே பிறவித் தொழில் என்று சபித்து ஒடுக்கி வைக் கப்பட்ட மக்களைப் பார்த்து, புரோகித மும் போதனையுமே குலத்தொழிலா கக் கொண்டவர்கள், எதிர்காலத்துக்கு திட்டமிட்டு உன் பிள்ளைகளை ஏன் பயிற்றுவிக்கவில்லை என்று கேட்பது திமிர், ஆணவம், பார்ப்பன பாசிசம் தவிர வேறில்லை.

அன்று இன்ன சாதிக்கு, இன்ன குலத்துக்கு இன்ன தொழில்தான் என்று வகுத்துப் புகுத்திய பார்ப்பன சனாத னத் தரகர்கள், இன்று ஏகாதிபத்தியத் தர கர்களாகி, இந்த இந்தச் சாதிகளில் பிறந் தவர்களுக்கு அறிவுத் திறனிருக்காது; வேண்டுமானால் பொதுப்பட்டியலில் வந்து போட்டி போட்டு, வேலை வாய்ப்புகளைப் பெறட்டும் (அங்கே யும் ஆளெடுப்பவர்கள் நம்மவாள் தானே என்று தைரியம்தான் போலும்) என்கிறார்கள்.

இத்தகைய பார்ப்பன பாசிசச் சக்தி களை என்ன செய்வது? எங்களுக்குக் கொஞ்சம் இடஒதுக்கீடு செய்து கொடுங்கள் என்று ஆதிக்க சாதிகளிட மும் ஆளும் வர்க்கத்திடமும் கெஞ்சிக் கொண்டிருப்பதை ஒடுக்கப்படும் மக் கள் ஒதுக்கி வைக்க வேண்டும். அந்த ஆதிக்கத்தையும் ஆளும் நிலையை யும் வீழ்த்த வேண்டும். குறிப்பாக, பார்ப்பன பாசிச சக்திகளின் சமூக ஆத ரவாக உள்ள இந்நாளைய ஆதிக்க சாதி களுக்கு இவ்வளவுதான் என்று இட ஒதுக்கீடு செய்துவிட வேண்டும். அதற் குமேல் திமிரவோ, ஆதிக்கம் - அதிகா ரம் வகிக்கும் பதவிகளில் பங்கேற் கவோ, அனைத்து உரிமைகளையும் மறுத்து, ஒடுக்கி வைக்க வேண்டும். அதாவது, ஒடுக்கப்பட்ட மக்களின் சர்வாதிகாரம், பார்ப்பன - பாசிசத் திற்கு எதிராக ''உழைக்கும் மக்களின் பயங்கரம்'' கட்டவிழ்த்துவிடப்பட வேண்டும்.

இன்னும் தெளிவாகச் சொல்வ தென்றால், சாதி ஆதிக்கத்துக்கு ஆதர வான பேச்சோ, செயலோ பயங்கர வாத முறைகளில் தண்டிக்கப்படும் என் கிற பயபீதி ஆதிக்க சாதிகளின், ஆளும் வர்க்கங்களின் நெஞ்சாங் குலைவரை பாய வேண்டும்.

● ஆர்.கே.




படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மாடு நுழையலாம்! இன்னும் நாங்க நுழையறதுக்குத்தான் வீடு யாரும் கட்டித் தரல'' என்று சலிப்புடன் சொல்கிறார்கள்.

எட்டுக்கு எட்டு, தென்னங்கீற்று மறைப்புத்தான் விவேக் ஒபராய் கட்டிய வீடு! மஞ்சள் இழைப்பதற்குக் கூட அந்த வீட்டில் ஒரு செங்கல் இல்லை; சுற்றி தென்னங்கீற்றுதான்! இதைத்தான் பார்ப்பன ஏடுகள் தாஜ்மகால் போல் புகழ்ந்து எழுதின. அப்பத்திரிகைகள் புளுகிய மாதிரி 400 வீடுகள் இல்லை; வெறும் 87 கொட்டகைகள்!




தேவனாம்பட்டின மீனவர்களுக்கு விவேக் ஒபராய் செய்து கொடுப்பதாகக் கூறிய திட்டங்கள் பற்றிய விளம்பரம்.

படங்கள்: சேகா

விவேக் ஒபராய் அழைத்து வந்த ஒரு கும்பல் படகைப் பழுது பார்ப்பதாக ஏமாற்றி விட்டு, அதில் வெறும் 'பெயிண்ட்' அடித்து பெயரும் நெம்பரும் குறித்தன. 'இவையெல்லாம் ரிப்பேர் செய்த படகுகள்' என்று அதன் பக்கத்தில் நின்று படம் எடுத்துக் கொண்டார், விவேக் ஒபராய். அதன் பிறகுதான், ''என்ன நடக்கிறது என்று அறிந்து கொண்டு, நாங்கள் விழித்துக் கொண்டோம்'' என்றனர், மீனவர்கள்.

ஒபராய் விசயத்தில் தங்கள் அறிவு எப்படி மயங்கியது என்பதை தேவனாம்பட்டின மீனவர்கள், ஒரு படம் பார்ப்பது மாதிரி விவரித்தனர்.

''அரசு, முன்னின்று ஏற்பாடு செய்த பெரிய கூட்டத்தில், கடலூர் ஆட்சியர் மற்றும் பெரிய அதிகாரிகள் மத்தியில் விவேக் ஒபராய் அறிமுகப்படுத்தப்பட்டார். வானொளி, பத்திரிகைகள் என்று ஏராளமான நிருபர்கள் வந்தனர். வானொளியில் இக்கூட்டத்தைப் பற்றி நேரடியாக ஒளிபரப்பு செய்யப் படம் பிடித்தனர். விவேக் ஒபராய் பலத்த கைதட்டலுக்கு மத்தியில் பேசினார். 'அரசு அனுமதியுடன் தேவனாம்பட்டினத்தை நான் தத்தெடுத்துக் கொள்கிறேன். நீங்கள் இழந்த அனைத்தையும் என்னிடம் பெற்றுக் கொள்ளலாம். புதிய வீட்டை கட்டிக் கொடுப்பேன். தொழில் நடத்த படகு, வலை, இன்ஜின் இவற்றை புதிதாக வாங்கிக் கொடுப்பேன்' என்றார். உடனடியாக, ஒவ்வொருவருக்கும் சேலை, வேட்டி, துண்டு, போர்வை வழங்கப்பட்டது. 'நிலம் வாங்க ஏற்பாடு நடக்கிறது. புதிய வீடுகளும் கட்டித் தருவேன்' என்றார். அதை அப்படியே, பெரிதாகப் புகழ்ந்து பத்திரிகைகளும் வானொளிகளும் செய்திகள் வெளியிட்டன. தமிழகமே, எங்கள் கிராமத்தை அதிசயமாகப் பார்த்தது. நாங்கள் அப்படியே மயங்கிப் போனோம். திடீரென விழித்துப் பார்த்த பொழுதுதான் தெரிகிறது, நாங்கள் சுடுகாட்டு மண்மேட்டில் அப்படியேதான் இருக்கிறோம் என்பது!'' என்று மடிப்பு வேட்டி தருவதாகச் சொன்ன விவேக் ஒபராய் இடுப்பு வேட்டி அவிழ்த்த கதையைக் கூறினார்கள்.

''விவேக் ஒபராய், ஆடிய கூத்தில் நாங்களும் வேஷம் கட்டி ஆடினோம். அதை இப்போது நினைத்தால் எங்களுக்கே வெட்கமாக இருக்கிறது'' என்றனர்.

''தேவனாம்பட்டினத்தில், சுனாமியில் இறந்தவர்களுக்கு எல்லாம் பிண்டம் கொடுத்து, சொர்க்கத்துக்கு அனுப்பப் போவதாகச் சொன்ன விவேக் ஒபராய், பார்ப்பனப் பூசாரிகளை அழைத்து, மீனவர்களுக்குப் பூணூல் மாட்டி கருமாதி நடத்தினார். அதில் நாங்களும் சிலர் போய் கலந்து கொண்டோம். கடைசியிலதான் எங்களுக்குத் தெரிந்தது, எங்கள் பிண்டத்துக்கே ஆபத்து நெருங்கி விட்டது என்பது'' என்று முடிச்சு மாறி ஒபராயின் முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்தார்கள், மீனவர்கள்.

வாழ்வியல் நெறி, இறைவழிபாடு, மதச் சடங்குகள் என்று பண்பாட்டு ரீதியில் 'பிற்படுத்தப்பட்ட' இந்துக்களை விழுங்கியதுபோல் பார்ப்பனியத்தால் மீனவர்களை விழுங்க முடியவில்லை.

## அறிவிப்பு

தோழர்களே,

பன்னிரண்டாம் ஆண்டு தமிழ் மக்கள் இசைவிழாவை நாம் நடத்தவியலாத துயரமான சூழலைத் தோற்றுவித்திருக்கிறது சுனாமி பேரழிவு. பல லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் தமது சொந்தங்களையும், உடைமைகளையும் இழந்து நிற்கின்றனர். பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும் பெண்களும் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை கிடைத்தும் கூட, அதனை அலட்சியம் செய்து மக்களைக் காவு கொடுத்த அதிகார வர்க்கம், நிவாரணப் பணிகளிலும் தனது குரூர முகத்தை வெளிக்காட்டி வருகிறது.

மக்களுடைய இந்தத் துயரத்தில் பங்கு கொள்ளும் நோக்கில் இவ்வாண்டு இசைவிழாவை நாம் ரத்து செய்கிறோம். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைக்கான போராட்ட இயக்கத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு கோருகிறோம்.

— மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com



படங்கள்: சேகர்



விவேக் ஓபராய் கட்டிக் கொடுத்த 'வீடு'; இராணுவம் போட்டுக் கொடுத்த கூடாரங்கள் (கீழே) - மீனவர்களின் வாழ்க்கையோ வெட்ட வெளியில்...

சுனாமி பேரழிவில் மீனவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் பிணங்களாகக் கடலில் மிதந்தபோது, பார்ப்பன பாசிஸ்ட் ஜெயலலிதா தலைமையிலான அரசு எந்திரம் 'மேக்கப்' கலையாமல் சுனாமி பேரழிவை வேடிக்கைப் பார்த்தது. பிணங்களின் மீது மண்ணை மூடிவிட்டு, தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு நிவாரணப் பணிகளை ஏலம் விட்டது.

அதன் விளைவுதான், விவேக் ஓபராய் போன்ற பிணந்தின்னிக் கழுகுகள் கூட்டம், தமிழகத்தில் சுதந்திரமாக வட்டமடித்து வருகின்றன. 400-க்கும் மேற்பட்ட முகாம்களை திறந்து வைத்துக் கொண்டு 100-க்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் நிவாரண வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவேக் ஓபராய் சினிமா கதாநாயகனாக இருந்ததால் பளிச்சென எல்லோருக்கும் தெரிந்து போனார். அதிகார கும்பலால் 'ஹீரோ' ஆக்கப்பட்டவர், மக்களால் 'ஆன்ட்டி ஹீரோ'வாக அடையாளம் காணப்பட்டு துரத்தப்பட்டார். ஆனால், அடையாளம் தெரியாமல், ஆயிரம் தொண்டு நிறுவனங்கள் பிணம் விழுந்த மீனவ கிராமங்களைச் சுற்றி திரிகின்றன. விவேக் ஓபராய் போன்று இவர்கள், சினிமா நடிகர்கள் அல்ல, நிஜ நடிகர்கள்! இழவு வீட்டில் ஒப்பாரி வைக்கும் கைத்தேர்ந்த கொலைகாரர்கள்! பிணத்திற்கு முன் இவர்களை அப்புறப்படுத்துவதுதான் முதல் வேலை! ஏனெனில் பிணத்தை மட்டுமே சுவைக்கும் கழுதைபுலிகள் இவைகள்!

'ஆக்ஸ்ஃபாம்', ஆக்ஷன் எய்ட் இந்தியா', வேர்ல்டு விஷன், குளோபல் விஷன் என நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பணிகளை, மீனவர்களின் அவலத்தை, பல ஆயிரம் கோடி டாலர்களுக்கான ''ப்ராஜக்ட்டுகளாக'' மாற்றுகின்றன.

பாரதிராஜாவின் தமிழ் சினிமாவில் கிராமசேவைக்கு வரும் கதாநாயகிகள் போல், மீனவ கிராமங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குவாலீஸ் கார்களில் அலைஅலையாக வந்து இறங்குகிறார்கள். 'சுனாமி' அநாதைகளை இரட்சிக்க வந்த ஹீரோக்களாகத் தங்களுக்கு அரிதாரம் பூசிக் கொள்ளுகிறார்கள். இந்த அரிதாரத்தைக் கிழித்துக் காட்டிய தேவனாம்பட்டின கிராம மக்களுக்குத் தமிழகம் சார்பில் நன்றி சொல்லலாம்!

எப்படியும் தீண்டி விடுவதென சுடுகாட்டில் அலையும் பாம்புகள் போல் மீனவர்களின் பிணங்களைச் சுற்றித் திரிகின்றன ஆர்.எஸ்.எஸ். கும்பல். இப்போது விவேக் ஓபராய் போன்றவர்களை முன்தள்ளி வெளிப்படையாகவே சீறுகின்றன!

''விவேக் ஓபராய் தொடர்ந்து கிராமத்தில் இருந்தால், எந்த நிவாரண வேலையும் நடக்காமல் கிராமமே, பூண்டோடு அழிந்து விடும், காலங் கடந்தால் தமிழக அரசிடம் முறையிட முடியாது என்று தெரிந்து கொண்டோம்! எனவே, விவேக் ஓபராயிடம், இனிமேல் இந்தக் கூத்தெல்லாம் வேண்டாம்! உங்கள் ஊர் போய் சேருங்கள் என்று 'நல்லபடியாக' நாங்களே அவரை வழியனுப்பி வைத்தோம்!'' என்று மீனவர்கள் சிரித்தனர்.

இந்த சினிமா கூத்துகள் ஒருபுறம் அரங்கேறிக் கொண்டிருக்கும்போதே, மறுபுறம், ''சேவா பாரதி'' என்ற பெயரில் ஒளிந்துக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ், கும்பல், விவேக் ஓபராயின் மூலம் தேவனாம்பட்டினம் மீனவர்கள் மத்தியில் மூக்கை நுழைக்க எத்தணித்தது. இதற்காக இந்து முன்னணி இராம. கோபாலனின் கையாள் வக்கீல் அருணாச்சலம் தலைமையில் தேவனாம் பட்டினத்தில் நடந்த பார்ப்பன பயங்கரவாதிகளின் படையெடுப்பு, பெரும் தோல்வியில் முடிந்தது, தனிக்கதை!

கடலூரிலிருந்து பச்சையப்பன்,
தீனதயாளன்.